

தமிழ்க்காவலர்
முருகு சுப்பிரமணியன் பொன்விழா மலர்

தமிழ்க்கல்வியின் காவலர் முருகு!



கே. குமாரசிவம்

பொறியியல் ஆலோசகர்,
குமாரசிவம், டான், அரிபின்
பொறியியல் ஆலோசகர் நிறுவனம், கோலாலம்பூர்.

மலேசிய தமிழ்ச் சமுதாயத்தின் கலை, சமூக, அரசியல், கல்வி, சமயத் துறைக்கு நண்பர் முருகு சுப்பிரமணியன் அவர்கள் ஆற்றிவந்துள்ள நற்சேவைகள் பொன்விழா மட்டுமின்றி மேலும் பல விழாக்கள் கொண்டாடி வாழ்த்த வேண்டியதாகும்.

தமிழ்ப் பத்திரிகையுலகில் மட்டுமின்றி பொதுவாழ்வின் எல்லாப் பிரிவிலும் முருகுவின் பணிகள் என்றும் முத்திரையாக விளங்கிவரும்.

தமிழுக்கும் - தமிழருக்கும் பணியாற்றி வருவோருக்கு சமுதாயமும் வரலாறும் என்றும் தவறாது நன்றி கூறிவரும்.

தொழிலியல் முன்னேற்றவாழ்வில் வாய்ப்புக் கிட்டும்போது தமிழ் நேசன், வானொலி, தொலைக்காட்சி வழி முருகுவின் அயராத நற்பணியினை அறிந்துவந்துள்ளேன். பல்வேறுஇடர்ப்பாடுகளுக்குமிடையே நமது மொழியும் கலாச்சாரமும் இந்நாட்டில் என்றும் நிலைத்துவர அவரது முயற்சிகளுக்கு நாம் அனைவரும் துணைநிற்க வேண்டும்

வருங்கால வளமிக்க தமிழர் சமுதாயம் கல்வியிற் சிறந்து விளங்க முருகு துவங்கியுள்ள "தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி" அவரது பணிகளில் என்னை மிகவும் கவர்ந்த ஒன்றாகும்.

சமுதாயத்தின் எல்லாப்பிரிவினரும் இப்பணிக்குத் தங்களாலியன்ற நல்லுதவிகளை வழங்கி அந்நிதியை வளர்த்து நமது வருங்கால சமுதாயத்தை சிறப்புடையதாக்க வேண்டும் என இப்பொன்விழா திருநாளில் கேட்டுக்கொள்கின்றேன்.

நதியே விரைதி

வாரலை நதியே வம்மினே பக்கல்
எம்மனோர் தம்மை இன்னு ரெனஓர்ந்து
தமிழ்தமிழ் எனத்தம் தாய்நினை வாகி
அன்னைக்கு அணிமணி மண்டபம் அமைக்கத்
தன்னையோர் தூணுய்த் தந்தநல் வித்தகன்
அடிமலர் தேடி அலைவதும் என்னை
கடிமலர் சுமக்கப் பிழைத்தகொல்
விரைதி ஈங்குள ''முருகு'' அவன் தாள்களே !



நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம்

முத்தமிழ்வித்தகர் முருகு சுப்பிரமணியன்

பொன்விழா

நிகழ்ச்சி நிரல்:

நாள் : 14-8-1976 சனிக்கிழமை

நேரம்: மாலை மணி 5.30

இடம்: தலைநகர் நகரமண்டபம்.

1.	தமிழ்வாழ்த்து	—கவிஞர் ரெ. சண்முகம், மலேசிய வானொலி
2.	வரவேற்புரை	—திரு. சா. ஆ. அன்பானந்தன் (செயலாளர், விழாக்குழு)
3.	தலைமையுரை	—கலைமாமணி ஆழி. அருள்தாசன் (தலைவர், விழாக்குழு
4.	பொன்னாடைப் போர்த்துதல்	—சிலாங்கூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்மிகு டத்தோ என். எஸ். மணியம் J.P.
5.	விருது அணிவித்தல்	—நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு ச. சாமிவேலு AMN., SMS.
6.	வாழ்த்துத் தட்டு வழங்குதல்	—சமயத்தொண்டர் திருமிகு செ. சொக்கலிங்கம்
7.	முருகு சிறப்புமலர் வெளியீடு	—இலக்கியப் புரவலர் திரு. எஸ். ராஜா PPT.
8.	தமிழ்க்கல்வி நிதி வழங்குதல்	—பொறியியல் ஆலோசகர் திருமிகு கே. குமாரசிவம்
9.	மாலை அணிவித்தல்	—பொதுநிறுவனங்களும் மக்களும்
10.	சிறப்பு வாழ்த்துரை	—தமிழறிஞர் காரைக்குடி கம்பரடிப்பொடி தமிழ்த்திரு சா. கணேசன் (தமிழ்நாடு)
11.	தமிழ்க்காவலர் முருகு உரை	
12.	நினைவுப்பரிசு வழங்குதல்	—வள்ளல் திருமிகு அ. சிதம்பரம்
13.	நன்றியுரை	—திரு. பெ. அ. தமிழ்மணி (விழாக்குழு உறுப்பினர்)

சிறப்புக் கலைநிகழ்ச்சி

1.	தமிழிசை	—ஸ்ரீ கலைவாணி இசைக் குழு
2.	நடனங்கள்	—பத்மினி நடனப் பள்ளி மாணவிகள்
3.	'மலைநாட்டில் வள்ளுவர்' முருகுவின் குறுநாடகம்	—சுங்கைவே/சுபாங் தமிழ் இளைஞர் மணிமன்றம்
	நிகழ்ச்சிகள் அறிமுகம்	—திரு. வி. பூபாலன், மலேசிய வானொலி



தலைவரின் முன்னுரை

“தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை” என்ற தகைமையான கருத்துக்கு எடுத்தியம்பாய் விளங்கும் முத்தமிழ்வித்தகர், தமிழ்க்காவலர் திருமிகு முருகு அவர்களின் பொன்விழாவை முன்வைத்து, குறிப்பிடத்தக்க சமுதாயப் பெருநோக்கு கொண்டு தலைவர்களில் தலைமகனாகத் திகழும் அவர்களுக்கு சமுதாயத்தின் சார்பில் வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றோம்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பாசறையில் தோற்றமுற்று, பெருந்தலைவர் தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களால் ஏற்றமுற்று, இன்று சமுதாய நல்லுணர்வு கொண்ட தொண்டர்களின் நெஞ்சங்களில் தலைவராய்ப் பரிணமிக்கும் முருகு அவர்கள், வாழும் நாளிலேயே வாழ்த்துப் பெறும் வாய்மைமிக்க விழுமியோர் ஆவார்.

முருகு அவர்கள் ஒருதுறை வல்லுநர் அல்லர். அணுகும் துறைகளிலெல்லாம் ஆய்வும் ஆற்றலும், செயல்களிலெல்லாம் சமுதாய ஏற்றமும்; உள்ளும் கருத்தெல்லாம் தெள்ளுதமிழ் முன்னேற்றமும், பழகும் முறையிலெல்லாம் பண்பாட்டின் இலக்கணமும், உடன்பாடு இல்லாத கருத்துக்களிலும் முரண்பாடு இல்லாத மொழியும் பண்பாடும் கொண்ட முதுபெரும் விற்பன்னர் என்றால் மிகையில்லை. இப்பெருமகனார் நடுநிலை மாறாத கொள்கையின் சிறப்போர்ந்து நினைந்துபார்க்க, நிகழ்த்தி மகிழ இப்பொன்விழா நிகழ்கிறது.

சமுதாயத்தின் வளர்ச்சியில் தூரநோக்கு கொண்ட தலைவர்களை காலத்தால் மறக்காமல் ஞாலம் உள்ளளவும் நினைவுகூர்வதில் நன்றியுள்ள நமதினத்தோர் பின்தங்கியவர் அல்லர். அதற்கு எடுத்துக்காட்டாகத்தான் இவ்விழா சிறப்புற அமைகிறது.

முருகு அவர்களின் நல்லியல்புகள் வல்லுநர்களால் ஓரப்பட்டு, உணரப்பட்டு நாடும், ஏடும் மதிக்கத்தக்க நிலையில் நிலவுவது வெள்ளிடைமலை. சான்றோர்கள் நூற்றாண்டுக்கொரு முறை தோன்றிடுவர். நமது மலேசிய பெருநிலத்தில் நமதினத்தில் இந்நூற்றாண்டில் தோன்றி, அரை நூற்றாண்டுகள் வாழ்ந்து வரும் முருகு அவர்கள் கால் நூற்றாண்டுக்கு முன் இந்நாடு வந்து, தாம் தோன்றிய நற்பயனை நிலைநாட்டியுள்ளார்கள் என்பதும் மிகையில்லை.

ஆகவே இப்பெருமகனார் பல்லாண்டு வாழ்ந்து நற்பணிகள் பல புரிந்து நமதினமும் மொழியும் வல்லமையோடும் வளத்தோடும் வாழ வளர வழிகாண வேண்டும். தாம் பெற்ற இன்பம் பிறரும் பெறவேண்டுமெனத் துடிக்கும் பொற்புடைய முருகு அவர்களின் நல்வாழ்வு வருங்காலத் தலைமுறைக்கு வழிகாட்டியாக விளங்கும் என்பது திண்ணம்.

இவ்விழா சிறக்க இணைந்த ஏற்றமிகு நெஞ்சங்களுக்கு வாழ்த்துக் கூறுகிறேன்; வாழ்க முருகு! வளர்க அவர்தம் வற்றாத தொண்டு!

வணக்கம்!

ஆழி. அருள்தாசன்
பொன்விழாக்குழுத் தலைவர்.



காணிக்கையாக்குகின்றேன்!

பச்சைப் பசுங் கோயிலான மலைநாட்டில் தமிழுக்கும் — சமுதாய முன்னேற்றத்துக்கும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட பேரறிஞர் முருகுவின் பொன்விழாவிற்கு சிறப்பு மலர் வெளியிடும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டபோது நான் சற்று அச்சமடைந்தேன்.

மலேசியாவின் தமிழ் மேதைக்கு நம்மால் மலர் தொடுக்க முடியுமா என்பதுதான் எனது உள்ளத்து வினவாகும். ஆனால் நண்பர்கள் திருவாளர்கள்: வழக்கறிஞரும் — தமிழ்ப்பள்ளி மாணவர் நிதி செயலாளருமான டி.டி. விஜேந்திரன், கு. சா. பெருமாள், பரிதாமணாளன், வி. பூபாலன், ஆர். சண்முகம், ஏ. எம். ஜோசப், பாடகர் ரெ. சண்முகம் ஆகியவர்களின் ஒத்துழைப்பாலும், அவர்கள் எனக்களித்த ஆர்வத்துடிப்பாலும் குறுகிய கால சிறப்பு மலர் ஒன்றினை உங்கள்முன் சமர்ப்பித்துள்ளேன்.

இம்மலரில் முருகு அண்ணாவைப்பற்றி முழுமையாக அனைத்தையும் படைக்க முடியவில்லை. காரணம், முருகு ஒரு பெருங் காப்பியம்—நீண்ட தொடர் காவியம் என்பதை அனைவரும் அறிவோம்; அவரது பொதுப்பணியின் காலம் ஒரு தலைமுறையாகும்.

ஒரு பெரிய மலர் மாலையில் சில மலர்களை மட்டும் இம் மலர்வழி நாம் நுகர்ந்து பார்க்க வாய்ப்பு கிட்டியிருக்கிறது.

இம் மங்களத் துவக்கமானது மேலும் பல படைப்புகளை மக்கள் முன் படைக்க அனைவருக்கும் வாய்ப்பளிக்கலாம் என நம்புகின்றேன். மலேசிய தமிழ் எழுத்துலகம் நிச்சயம் அதைச் செய்யும்.

விளம்பரத்தையும் — தம்மைப்பற்றி அதிகமாக எதையும் சொல்ல விரும்பாத முருகுவின் அடக்க மனம் இம்மலர் வசந்தமலராக மணம் பரப்புவதற்கு தடையாயிருந்தது என்பதை நான் உங்கள்முன் சொல்ல வேண்டியது அவசியமாகும்.

தமிழ் மேதையான முருகு எப்படி மாபெரும் சமுதாய மேதையாக— சமுதாயக் காவலராக உயர முடிந்தது என்பதற்கு நான் கூறும் அவரது 'அடக்க உள்ளமே' மாமருந்தாகும்.

"மலருக்குச் செலவாகும் பணம் அனைத்தையும் தமிழ்க் கல்விக்கு கொடுத்தால் நான் மிகவும் மகிழ்வேன்" என்று ஆனந்தக் கண்ணீர் மல்கக் கூறிய அந்த மனிதருள் மாணிக்கத்தின் பெரு உள்ளத்தையும் கடந்து உங்கள் முன் சில பக்கங்களைச் சமர்ப்பித்துள்ளேன்.

முருகுவின் தமிழ் உள்ளத்துக்கு இம்மலரைக் காணிக்கையாக்குகின்றேன். மலர் மணம் பரப்பி சமுதாயமெங்கும் ஊடுருவி அதன் கதம்ப நினைவில் அனைவரும் நன்றிகூற வேண்டும் என்ற இன்ப நினைவோடு விடைபெறுகின்றேன்.

என்னுடன் ஒத்துழைத்த தோழர்களுக்கு என் இதயபூர்வமான நன்றி.

அன்பன்,

எஸ். இராஜா, பி.பி.டி.
மலர் வெளியீட்டாளன்.



முருகுவின் சேவைகள் மறக்கமுடியாதவை!

தமிழ் நேசன் ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் சிறு வயது முதலே பத்திரிகைத் துறையில் ஈடுபாடு கொண்டவர். முதலில் தமிழ் நாட்டிலும் பின்னர் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும் அதே துறையில் பணிபுரிந்து வருகின்ருர். தமிழ் முரசு, தமிழ்நேசன் பத்திரிகைகளின்வழி வளர்ந்து வந்துள்ள அவரது எழுத்து வன்மையை நாம் கண்டு வந்துள்ளோம்.

இந்நாட்டில் தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் அவர் சிறப்பாகத் தொண்டாற்றியுள்ளார். தமிழ்நேசன் வழி சிறுகதை எழுதுவோர் ஆய்வுக் கட்டுரை சமைப்போர், கவிதை புனேவோர் போன்ற இளம் எழுத்தாளர்களுக்கு சிறந்த வாய்ப்புக்களை உண்டாக்கி அவர்களை ஊக்குவிப்பது போன்ற நல்ல பணிகள் பலவற்றை அவர் ஆற்றியுள்ளார்.

தேசிய காரியம் மற்றும் ம. இ. கா. திட்டங்களுக்கு தமிழ்நேசன் எப்போதும் முக்கியத்துவம் தந்து வந்துள்ளது. திரு. முருகு தமிழ்நேசன் ஆசிரியர் பொறுப்பை ஏற்ற பின்னர் இம்முக்கியத்துவம் மேலும் விரிவாக்கப்பட்டது. கடந்த காலங்களில், மலேசிய இந்தியர்களிடையே அரசியல் விழிப்புணர்வும், சமூக அபிவிருத்தியுணர்வும் உண்டாக ம. இ. கா. எடுத்துக் கொண்ட முயற்சிகட்கு தமிழ்நேசன்வழி அவர் காட்டிய ஆர்வமான ஒத்துழைப்புக்களை நாம் மறக்க முடியாது.

இவரது அரிய பணிகளைப் பாராட்டி மா. த. பேரரசர் அவர்களால் ஏ. எம். என். விருதும் சிலாங்கூர் சுல்தான் அவர்களால் எஸ். எம். எஸ். விருதும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் நீடுழி வாழவும் அவரும் அவரது குடும்பத்தாரும் எல்லா வளங்களையும் பெறவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

டான்ஸ்ரீ டத்தோ வெ. மாணிக்கவாசகம்,
ம. இ. கா. தேசியத் தலைவர்,
தொடர்புத்துறை அமைச்சர்.

தமிழ் வளர்த்த மேதைகளிலே....



ஒரு பத்திரிகையின் ஆசிரியர் ஒரு சிறந்த அறிஞர்; ஒரு சிறந்த இலக்கியவாதி; ஒரு சிறந்த சமூக சீர்திருத்தவாதி என்றால் அது மிகையாகாது.

முத்தமிழ்வித்தகர் முருகு சுப்பிரமணியன் இத்தனை பெருமைக்கும் புகழுக்கும் உரியவர்.

தொட்ட இடமெல்லாம் பொன்னாகும் இந்த மலேசியா மண்ணிலே முருகு எத்தனையோ பேர்களை இலக்கியவாதியாக்கி இருக்கிறார்; எத்தனையோ பேர்களை சமூக சீர்திருத்தவாதியாக்கி இருக்கிறார்.

பத்திரிகைத் துறை என்றால் அது ஒரு கண்ணியமுள்ள பணி; கௌரவ மிக்க பணி. ஆனால் மிகமிகப் பெரிய பொறுப்புவாய்ந்த பணி.

கண்ணியமுள்ள—கௌரமிக்க ஒரு பெரிய பொறுப்புவாய்ந்த பணியை முத்தமிழ்வித்தகர் ஏற்று பல்லாண்டுகளாக சீரோடு, சிறப்போடு ஆற்றி வருகிறார் என்றால் அவரைப் பாராட்டாமல் இருக்கமுடியாது; கௌரவிக்காமல் இருக்கமுடியாது; கண்ணியப்படுத்தாமல் இருக்கமுடியாது.

முருகு அவர்களுக்கு ஒரு பொன்விழா இன்றியமையாததுதான் ஒரு பாராட்டுவிழா இன்றியமையாததுதான்.

முருகு ஒரு நல்லவர் — ஆனால் வல்லவர். அதனால்தான் அவர் ஆயிரமாயிரம் கேள்விகளுக்குப் பதில் அளித்து மக்கள் பிரச்னையைத் தீர்த்துவைத்தார் — தீர்த்துவைக்கிறார்.

‘உலகமெல்லாம் தமிழ் மணக்கச் செய்தல் வேண்டும்’ — கவிஞனின் உதிர உணர்ச்சி வடித்த இந்த முத்துக்களில் ஒன்று முருகுவின் உதிரத்தில் பாய்ந்துவிட்டது போலும்.

கடல் கடந்து இந்த மலேசியா வந்து தமிழ் வளர்க்கிறார்; படிக்கத் தெரியாதவர்களெல்லாம் இன்று படிக்கிறார்கள்; பேசத் தெரியாதவர்களெல்லாம் இன்று மேடை ஏறிப் பேசுகிறார்கள்; எழுதத் தெரியாதவர்களெல்லாம் இன்று எழுதுகிறார்கள்; ஆம் கதை எழுதுகிறார்கள்; கட்டுரை எழுதுகிறார்கள்; கவிதை எழுதுகிறார்கள்; நாடகங்கள் எழுதுகிறார்கள்.

மலேசியாவில் எத்தனையோ சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், தொடர்கதைகள், நாடகங்கள் உருவாகி இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் முருகு சுப்பிரமணியன் அவர்கள்தான்.

இந்த நாட்டில் தமிழ் இலக்கியத்தை வளர்த்த—வளர்க்கின்ற முருகு அவர்களை ‘முத்தமிழ்வித்தகர்’ என்று கண்ணியப்படுத்துவது தமிழ்க் குலத்துக்கே பெருமைக்குரியது.

மேதைகள் மறைந்து விடுகிறார்கள். ஆனால் மேதைகளின் சிறப்புப்பணி ஜோதியாகப் பிரகாசித்துக் கொண்டே இருக்கும்.

மலேசியாவில் தமிழ் வளர்த்த மேதைகளின் வரிசையில் மதிப்பிற்குரிய முத்தமிழ்வித்தகர் முருகு சுப்பிரமணியன் இடம்பெறுகிறார். அவருடைய சேவை என்றும் போற்றப்பெற்று விளங்க வாழ்த்துகிறேன்.

டான்ஸ்ரீ டத்தோ *S.O.K.* உபைதுல்லா
மேலவைத் துணைத் தலைவர்.



முருகுவின் சேவை நிறைய தேவை!

முத்தமிழ் வித்தகர் திரு. முருகு சுப்பிரமணியத்திற்குப் பொன் விழா எடுப்பதை அறிந்து மிக மகிழ்வடைகிறேன்.

திரு. முருகு சுப்பிரமணியன் எனது நீண்டகால நண்பர்களுள் ஒருவர். நம் சமுதாய மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அவர் ஆற்றியுள்ள தொண்டுகளின்மீது நான் நன்மதிப்புக் கொண்டிருக்கிறேன்.


எதிர்காலத்தில், நம் மக்களின் முன்னேற்றத்திற்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் ஏராளம் உள்ளன. பொருளாதார—கல்வி முன்னேற்றம் குறித்து நாம் அதிகம் அதிகமாகச் செய்ய வேண்டியுள்ளது. இவற்றை நிறைவேற்றுவதில் சமுதாயத்தில் அக்கறைகொண்ட எல்லா சக்திகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். குறிப்பாக பத்திரிகையாளர்களுக்கு இதில் பெரும் பங்கிருக்கிறது.

திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் ஆழமான பத்திரிகைத்துறை அனுபவமும், சமுதாயப் பற்றுமிக்கவர். புதிய தலைமுறைப் பத்திரிகையாளர்களுக்கு ஓர் வழிகாட்டியாகவும் விளங்குகிறார்.

அவரது சேவை நம் மக்களுக்கு இன்னும் அதிக அளவில் தேவைப்படும் இச்சமயத்தில் அவர்தம் பொன்விழா நடப்பது பெருமைக்குரியது.

அவர் நல்லாயுளும் திடகாத்திரமும் பெற்று வாழ இறைவனை இறைஞ்சுகிறேன்.

டாக்டர் பி. பி. நாராயணன்
பொதுக்காரியதரிசி,
தே. தோ. தொ. சங்கம்.



முருகுவுக்குப் பொன்னான வாழ்வு அமையட்டும்!

மலேசியாவின் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முருகு அவர்கள் ஆற்றிய பணி மிகப் பெரியதாகும். இன்று மலேசியாவில் சிறந்த தமிழ் எழுத்தாளர் களையும், கவிஞர்களையும் உருவாக்குவதில் முருகு அவர்கள் பெரும் பங்காற்றி யிருக்கிறார். தமிழ் நேசன் பத்திரிகையின் மூலமும், தமிழ் எழுத்தாளர் சங் கத்தின் மூலமும் தமிழ் எழுத்துத்துறை வளர்ச்சிக்குப் பல ஊக்குவிப்புத் திட்டங்களை உருவாக்கி தமிழ் எழுத்தாளர்களை உருவாக்குவதற்கு பெருந் துணையாக இருந்திருக்கின்றார்.

சமூக ஒற்றுமைக்கும், கட்டுப்பாட்டிற்கும் முருகு அவர்கள் தமிழ் நேசன் மூலமாக ஆற்றிய பங்கு மிகப் பெரியது. பல்வேறு சமூக அமைப்பு களுக்கு ஆலோசகராகவும், புரவலராகவும் பொறுப்பேற்று அவ்வமைப்புக் களின் சீரான இயக்கத்திற்கு சமூக தலைமைத்துவத்தை வழங்கி வந்திருக் கின்றார்.

பொன்னாடை போர்த்தப்பட்டு பொன்விழா கொண்டாடும் முருகு அவர் களுக்கு தொடர்ந்து பொன்னான வாழ்வு அமைய இறைவனை பிரார்த்திப்ப தோடு அவருக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த் தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

சி. சுப்பிரமணியம்
துணை அமைச்சர், பிரதமர் துறை,
ம. இ. கா. பொதுச் செயலாளர்.



மலேசியாவுக்குக் கிடைத்த மாபெரும் தமிழறிஞர்!

திரு. முருகு அவர்கள் தம் வாழ்நாள் முழுவதினையும் பத்திரிகை உலகிலேயே கழித்து வந்துள்ளார்கள். தமிழ் நாட்டிலே இருந்த காலத்தில் பல நாளிதழ்களிலும், மாத வெளியீடுகளிலும் சேவையாற்றி வந்த தன்வழி, தமிழுலகு போற்றும் தலைசிறந்த கவிஞர்களுடனும், கற்றறிந்த சான்றோர்களுடனும் அணுக்கமாகப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டதினால் கிட்டிய பழுத்த அனுபவத்துடன் மலைநாட்டுக்குத் திறமை வாய்ந்த பத்திரிகையாளராகவும் தமிழறிஞராகவும் வந்துசேர்ந்தார்.

தமிழ்ப் பத்திரிகையுலகில் தனக்கென ஒரு தனியிடத்தை ஏற்படுத்திக்கொண்டு, தமிழ் மொழிக்கும் இலக்கியத்திற்கும் அயராது தொண்டாற்றிவரும் முத்தமிழ்வித்தகருக்கு பொன்விழா கொண்டாடுவதும், பொன்னுடை போர்த்துவதும் சமுதாயத்தின் நன்றியுணர்வைக் காட்டுவது போன்றதாகும்.

இந்தப் பொன்விழாவின்போது, மேலும் பல்லாண்டு வாழ்ந்து சமுதாயத்திற்கு நற்பணியாற்றிட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டி, எனது மனமுவந்த வாழ்த்தினை மகிழ்ச்சியுடன் மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கு. பத்மநாபன் கே. எம். என்.
நாடாளுமன்றச் செயலாளர்,
தொழிலாளர், ஆள்பல அமைச்சு.



முருகு அறிவுரையின் கருப்பொருள்!

இந்நாட்டு இந்திய சமுதாயத்தின் வழிகாட்டியாகவும் — தமிழர் தம் உரிமைக்குரலாகவும், தமிழ் மொழியின் பாதுகாவலராகவும் விளங்கும் 'முருகு' அண்ணுவுக்குப் பொன்விழாவில் எனது வாழ்த்துக்களை சமர்ப்பிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன்.

பொன்விழாக் குழுவினர் காலமறிந்து இவ்விழாவினை ஏற்பாடு செய்துள்ளது, சமுதாயம் முருகு மீது கொண்டுள்ள நன்றியுணர்ச்சிக்கும்—நம்பிக்கைக்கும் சான்ருகும்.

ஓராண்டில் 365 நாட்களில், இக்காலங்களில் எத்தனையோ இடர்ப்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டாலும், சமுதாயம் ஒன்ருக வேண்டும் என்ற அவசியமேற்படும்போது ஒரு தேசத்தைக் காக்கும் போர் வீரனைப்போல தமிழ் நேசனும்—முருகுவும் ஆற்றும் நற்பணிகள் என்றும் சமுதாயத்தின் கண்முன் நன்றியுடன் நோக்கத்தக்கதாகும்.

பொதுத் தேர்தல் காலங்களில் முருகுவின் பணிகள் நம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றன. அவரது தலையங்கக் கருத்துக்கள் நமக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்து உழைக்கத் தூண்டுகின்றன.

இன்று சமுதாயக் கருத்துக்களை—எண்ணங்களை— அடிப்படை மக்களின் லட்சியங்களைத் திரட்டி என்னைப் போன்ற அரசியல் வாதிக்கு அறிவுரை வழங்கும் கருப்பொருள் தமிழ்நேசனும் முருகுவுமாகும்.

இவ்விரு சக்திகளின் பெரும் துணையுடன்தான் நான் எனது கடமைகளை பொதுமேடையில் மட்டுமின்றி அமைச்சர் நிலையிலும், நாடாளுமன்றத்திலும் எடுத்துச்சொல்லி காரியமாற்ற முடிகிறது.

இத்தகைய சக்திமிக்க—உற்சாக இயந்திரத்தின் பொன்விழா எல்லா வகையிலும் சிறப்புறவும்—முருகுவுக்கு மேலும் பல பொன்விழாக்கள் கொண்டாடவும் இதய பூர்வகாக வாழ்த்துகின்றேன்.

அன்புடன்,

ச. சாமிவேலு, ஏ.எம்.என்., எஸ்.எம்.எஸ்.
சுங்கைசிப்புட் நாடாளுமன்ற உறுப்பினர்,
ம. இ. கா. தேசிய உபதலைவர்.

முருகுவின் தமிழ்ப்பணிக்கு நன்றி!

செ. சொக்கலிங்கம் வாழ்த்து!

சகோதரர் முருகுவின் சமயப் பணிகளும்—கல்விப் பணிகளும் அவரது புகழை எல்லா நிலையிலும் வானுயர உயர்த்தியுள்ளதுடன் வரலாற்றில் அவருக்கு இடம் கொடுத்துள்ளது.

அவரது அரிய கருத்துக்கள், ஆலோசனைகள், விளக்கங்கள் சமுதாயத்தின் வருங்கால செல்வங்களை கல்வி, சமய அறிவுகளுக்கு முறையான அடிப்படையை வகுத்துள்ளது எனலாம்.

ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தானத்தைப் பொருத்தவரை முருகுவை எல்லா வகையிலும் முழுமையாகப் பயன்படுத்தி அவர்களது — அறிவு ஆலோசனைகளைப் பெற்று சிறப்புடன் இயங்க வழி கண்டுள்ளது.

முருகு துவக்கிய தமிழ்க் கல்வி நிதிக்கு ஒரு லட்சம் வெள்ளி நன்கொடை வழங்க முன்வந்த தேவஸ்தானத்துக்கு அறங்காவலர் குழுவில் தலைவருக்கு வாய்ப்பளித்தமைக்கு இச்சமயத்தில் நன்றி கூறுகின்றேன்.

இத்தமிழ்க் கல்வி நிதியளிப்பால் தேவஸ்தானம் பெருமையடைவதுடன் சர்வ சமூகத்திலும் ஆலயத்தின் கௌரவமும் தகுதியும் உயர்ந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

முருகுவுக்கும் எனக்குமுள்ள தொடர்பு 15 வருடங்கட்குட்பட்டதாகும். இக்காலங்களில் அவர் என்னைப் பார்க்கும்போதெல்லாம் பொதுவாழ்வின் எல்லாத்துறை குறித்தும் மனம் திறந்து விவாதிப்பார். இதன் மூலம் அவர்களது சமுதாய மேம்பாட்டுணர்வை என்னால் நன்கு அறிய முடிந்தது.

ஒவ்வொரு வினாடியும் சமுதாய சிந்தனையில் மூழ்கி நிற்கும் அப்பெருமகனுக்கு பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்யும் பேறுபெற்ற நாம் அனைவரும் பாக்கியசாலிகளே எனலாம்.

வாழ்க முருகு அண்ணா!

வளர்க அவர்களின் சமுதாயத் தொண்டு!

செ. சொக்கலிங்கம்,
அறங்காவலர்,
ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் தேவஸ்தானம்,
கோலாலம்பூர்.

சகோதரரை வாழ்த்துகிறேன்!



டத்தோ என். எஸ். மணியம்
சிலாங்கூர் சட்டமன்ற உறுப்பினர்,
சிலாங்கூர் ம. இ. கா. தலைவர்.

தமிழுக்கும்—தமிழர் நலனுக்கும் அயராதுழைக்கும் எனது அருமைச் சகோதரருக்கு பொன்விழா என்பதை அறியும்போது உளப்பூர்வமாய் பெருமகிழ்வெய்துகின்றேன்.

எழுதுகோலைக் கையில் தொட்டவுடன் நீரோட்டம்போல் சமுதாயத்தின் எல்லா நிலைகளையும் தயக்கமின்றி அலசி ஆராயும் அவரது ஆற்றல் அனைவரையுமே மெய்சிலிர்க்கவைப்பதாகும்.

எப்போதாவது தொலைபேசியில் அழைப்பார்; ஏதோ உதவிக்கென்று நினைப்போம்; இருக்காது. அரசாங்கத்தில் நமக்குள்ள சில பிரச்னைகள்பற்றி பேசி—தலையங்கம் எழுத விளக்கம் கேட்பார்.

தனக்கென எதுவும் நாடாத—தமிழர் சமுதாயத்துக்காக என்னாளும் உழைக்கும் அவர் ஒரு பெரிய தலைவர். அவருக்குத் தேர்தல் வேண்டாம்; ஏனென்றால் அவர் மக்கள் மனதில் நிரந்தரமாய் ஏற்றுள்ள பதவிக்கு என்றுமே போட்டியில்லை.

தம்மை, வாய்ப்புக்கிட்டும்போது வசைபாடுவோரையும் சகித்துக்கொள்ளும் அப்பெருமகனுக்கு நடைபெறும் பொன்விழா நம் சமுதாயத்துக்கே நடைபெறும் நூற்றாண்டு விழாவாகும்.

முருகுவுக்கு மேலும் பல பொன்விழாக்கள் கொண்டாட வாழ்த்துகிறேன்.

முத்தமிழுக்குப் பொன்விழா!

'தமிழுக்குக் கதி இருவர்' என்று தமிழ் கூறு நல்லுலகம் திருவள்ளுவரையும் கம்பரையும் போற்றுகின்றது. நமது மலேசியத் திருநாட்டில் 'தமிழுக்கு இருவர்' என்று சிறப்பித்துப் போற்றவேண்டியவர்கள் அமரர் தமிழவேள் கோ.சா.வும் முத்தமிழ்வித்தகர் முருகுசுப்பிரமணியனும் ஆவர்.

இதில் தமிழவேள் கோ.சா. முன்னர் தமக்கிருந்த தமிழ்ப் பொறுப்புகளை எல்லாங்கூட முருகுவின் தலையில் சுமத்திவிட்டுச் சென்றுவிட்டார். இன்று தமிழ் என்றால்—தமிழர் நலன் என்றால் முதல் குரல் எழுப்பவேண்டியவர் முருகுதான் என்னும் பெருநிலை உருவாகும் சூழ்நிலைகள் தாமே ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அன்று தமிழின் உயர்வுக்குத் தாழ்வு என்னும் நிலை ஏற்பட்டபோது தமிழவேள் கோ.சா. அவர்கள் 'தமிழ் எங்கள் உயிர்' நிதி திரட்டி பல்கலைக்கழகத்தில் தமிழ் இடம் பெறும் உணர்வை ஏற்படுத்தினார். ஆனால் இன்று தமிழின் அடிவேருக்கே ஊறு நேரும் நிலை ஏற்பட்டிருக்கும்போது தமிழ்க்கல்வி நிதி திரட்டி தமிழ்ப்பயிருக்கு தமிழ் உணர்வு என்னும் நீர் பாய்ச்சும் அரும்பெரும் பணியை முருகு மேற்கொண்டிருக்கின்றார்.


தமது 'பொன்னி'வழி கவிஞர் கண்ணதாசன் போன்ற பெருங்கவிஞர்களையே தமிழ் இலக்கிய உலகுக்கு வழங்கிய முருகுவின் பொற்கரங்களால் மலேசியத் தமிழ் உலகம் ஏற்றம்பெற்றிருக்கின்றது.

இந்தத் தமிழ் தலைவனுக்கு பொன்விழா என்னும்போது தமிழ் உள்ளங்கள் மகிழ்ச்சியால் துள்ளுகின்றன பொன்விழா அகவையைத்தொட்ட முருகுவுக்கு மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களைப் படைக்கின்றேன்.

மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தமிழுக்குப் பணிசெய்ய அருளுமாறு தமிழன்னையைப் போற்றுகின்றேன்.

சி. வடிவேல்
தலைவர்,
மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்.

இலக்கிய நேசன் முருகு



அகிலன்

கால் நூற்றுண்டுக்கு முன்னே திருச்சியில் நான் பணியாற்றிக் கொண்டிருந்த காலம். ஒரு நாள் அஞ்சலில் என் சொந்த ஊரான புதுக்கோட்டையிலிருந்து எனக்கு ஒரு மாத இதழும் கடிதமும் வந்திருந்தன. இதழைப் பிரித்துப் பார்த்தேன். அழகான பெயர், 'பொன்னி'; உள்ளே அருமை அருமையான சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள். இலக்கியத்தின் நறுமணம் கமழ்ந்த அந்த இதழ் வெளியீட்டுத் தரத்திலும் சிறந்து விளங்கியது.

நான் திகைப்படைந்தேன். நல்ல ஓவியர்களோ, சிறந்த அச்சகமோ, இதழைக் கொண்டுவருவதற்குரிய பிற வசதிகளோ இல்லாத புதுக்கோட்டையிலிருந்து கொண்டு எப்படி ஒருவரால் இப்படிப்பட்ட இதழைக் கொண்டுவர முடிகிறது? யார் இதன் ஆசிரியர்?

கடிதத்தைப் பிரித்துப் படித்தேன். எனக்கு முன்பின் நேரில் பழக்கமில்லாத முருகு சுப்பிரமணியன் என்ற அன்பர் என்னிடம் கதை கேட்டு எழுதியிருந்தார். நான் யோசனை செய்தேன். 'சென்னையில் இருந்து கொண்டே இவ்வளவு சிறப்பாக இதழைக் கொண்டுவர இயலாத நிலையில், இவர் எங்கோ புதுக்கோட்டையில் இருந்துகொண்டு, இப்படிப்பட்ட சாதனையைப் புரிந்திருக்கிறுரே, இந்த இதழுக்கு நாமும் எழுதினுல் என்ன?'—விரைவில் அனுப்புவதாக அவருக்குப் பதில் எழுதிப் போட்டேன்.

தொடர்ந்து சிறுகதையையும் அனுப்பினேன். 'பொன்னி'யில் நான் கண்ட ஒரு முக்கியமான சிறப்பு, அதன் தனித்தன்மைகொண்ட போக்காகும். ஒருவகைத் தனித்தன்மையின் முத்திரை—Stamp of individuality— அதில் இருந்தது. சென்னையிலிருந்துவந்த எந்தப்பிரபலமான பத்திரிகையைப் போலவும் அது இல்லை. எதையும் அது பின்பற்றவில்லை. இளம் எழுத்தாளர்கள் சிலரையும் புதிய கவிஞர்கள் சிலரையும் அது துணிந்து அறிமுகம் செய்திருந்தது.

வெறும் வாணிக நோக்குடன் வெளியிடப் பெறுமல், 'பொன்னி' ஒரு குறிக்கோள் கொண்ட இலக்கிய இதழாக விளங்கியது. அடுத்தமுறை நான் புதுக்கோட்டைக்குச் சென்றபோது அன்பர் முருகு சுப்பிரமணியன் அவர்களை நேரில் சந்தித்தேன். இலக்கியத்தால் ஏற்பட்ட தொடர்பு நாளடைவில் நட்பாக மலர்ந்தது. சென்னை பத்திரிகைகளின் கெடுபிடி எனக்கு எவ்வளவுதான் இருந்தபோதிலும் அவ்வப்போது நான் 'பொன்னி'க்கும் எழுதத் தவறுவதில்லை.

தமிழ் இலக்கியத்தில் தனி இடம்

'பொன்னி'யின் வாயிலாகத் தமிழ் நாடு இலக்கிய வரலாற்றில் முருகு ஒரு தனி இடம் தேடிக்கொண்டவர். 'பாரதிதாசன் பரம்பரை' என்ற வரிசையில் சில அற்புதமான கவிஞர்களை அவர் இங்கு அறிமுகம் செய்து வளர்த்து வந்திருக்கிறுர். அவ்வாறே முருகு அறிமுகம் செய்ததன் வாயிலாகத் தேர்ந்த எழுத்தாளர்களாக வளர்ந்தவர்களும் இங்கே இருக்கிறுர்கள்.

எத்தனையோ சோதனைகளுக்கிடையிலும் 'பொன்னி'யை இறுகப் பற்றிக்கொண்டு போராட்டம் நடத்திப் பார்த்தவர் முருகு அவருக்கிருந்த இலட்சிய வேகத்தின் காரணமாகப் பொருளாதாரத் துறையில் 'பொன்னி' அவருக்குப் பல நெருக்கடிகளைத் தந்திருக்கக்கூடும். ஆனுல் இலக்கிய வளர்ச்சியைப் பொறுத்தவரையில் அவரது சோதனை ஒரு சாதனைதான். வரலாற்றில் இடம் பெறத்தக்க நன் முயற்சிதான் அது.

வருந்தினேன்

முருகு கடல் கடந்து புறப்பட்டபோது அவருக்காக வருந்தியவர்களில் நானும் ஒருவன். இங்கு நடைபெறும் போராட்டத்துக்கிடையில் இலக்கிய உல

கம் தன் தானைத் தலைவர்களில் ஒருவரை எங்கோ அனுப்பும் நிலை வந்துவிட்டதே என்ற ஏக்கம் எனக்கு.


ஆனால் அங்கு அவர் சென்ற சில ஆண்டுகளிலேயே என் கவலை மறைந்தது ஏக்கம் தீர்ந்தது. ஆண்டுகள் செல்லச் செல்ல கவலை களிப்பாக மாறியது; ஏக்கம் ஊக்கமாக உருவெடுத்தது. 'எங்கு சென்றாலும் முருகு முருகுதான்!' என்பதை அவர் நிலைநாட்டிவிட்டார்.

மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு முருகு ஆற்றியுள்ள பணியும் ஆற்றி வரும் பணியும் கடல் கடந்து வாழும் என்னைப் போன்றவர்களையெல்லாம் களிநடம் புரிய வைக்கிறது. நான்கைந்து ஆண்டுகளாகவே நான் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சியை இங்கிருந்தவாறு எட்டிப் பார்த்து வருகிறேன். அதில் முருகுவின் பங்கு பற்றி எனனுடைய இளம் நண்பர்கள் டாக்டர் தண்டாயுதம், ரெ. கார்த்திகேசு, தம்பிராஜா ஆகியோர் சொல்லக் கேட்டபோது, 'முருகு இன்னும் தம்முடைய பழைய பிடிவாதத்தை விடவில்லை; வயது வளர்ந்த போதிலும் இலட்சியப் பிடிப்பில் இன்னும் இளைஞராகவே இருக்கிறார்' என்ற பெருமை எனக்கு ஏற்பட்டது.

'தமிழ் நேசன் பவுன் பரிசுக் கதை' களையும், எழுத்தாளர் சங்கம் வெளியிட்ட 'பரிசு'க் கதைகளையும் படித்தபோது, நேசனின் பங்கு அதில் தெரிந்தது. பெரும்பாலான கதைகள் தமிழ் நேசனில் வெளி வந்தவை

மலேசிய இலக்கியத்துக்கு புது வேகம் தந்தார்

மலேசியத் தமிழ் இலக்கிய இயக்கத்துக்குப் புதிய வேகம தந்து கொண்டிருக்கிறார் முருகு. எழுத்தாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்துத் தூண்டிவிடும் தன்மையை அவர் 'பொன்னி' யோடு நிறுத்திக்கொள்ளவில்லை. அங்கே இலக்கிய நண்பர்கள் புலவர் சேதுராமன், டாக்டர் தண்டாயுதம், ரெ. கார்த்திகேசு, தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் போன்றவர்களின் உதவியோடும், ஒத்துழைப்போடும் அவர் இயங்கி வருவது பாராட்டத் தக்க செயலாகும்.



பேரறிஞர் அண்ணாவை அவரது இல்லத்தில் 1965-ல் சந்தித்தபோது.

(தமிழ் வளர்க்கும் அகத்தியன்!)

வீ ர ம ா ன்

தாளெடுத்துக் கோலெடுத்துத் தமிழினத்துத் தலைவிதியின்
தரமுயர்த்தப் பாடுபடும் வன்மையன்! - எவர்
தாளடுத்தும் வாழவெண்ணித் தன்மதிப்புக் கொள்கைவிட்டுத்
தகவில்லா வழிசெல்லாத் திண்மையன்! —பொய்ச்
சூலெடுத்து வரும்பகையைச் சுக்குநூறாய் ஆக்கிவைத்துச்
சுடர்கொடுத்து மொழிகாக்கும் உண்மையன்! —நெறி
நூலெடுத்துச் சொல்வதுபோல் நோய்பிடித்த நிலைமாற்ற
நுண்ணறிவு மருந்துதரும் தன்மையன்!

ஞாலமெலாம் வாழ்த்துரைக்க ஞானரதம் ஊர்ந்துவர
நாதமெனக் கருத்துரைக்கும் திருமகன் —வாழ்
காலமெலாம் தமிழ்வளர்க்கும் கடமையிலே அகத்தியனைக்
கவிகொஞ்சும் புகழ்வளர்ப்பான் முருகவன்! —இனக்
கோலமெலாம் பிறஇனத்தார் கொண்டாடிப் போற்றுதற்குக்
குறையாத பங்களிக்கும் மெருகவன் —அவன்
நாளமெலாம் தமிழுணர்வே நதியாகிப் பாய்வதனல்
நற்றமிழ்போல் வாழ்ந்துநலம் பெறுகவே!

இலக்கிய வளர்ச்சி என்பது ஒரு சமுதாயத்தின் உள்மன வளர்ச்சியாகும். அறிவு வளர்ச்சியும், பண்பாட்டு வளர்ச்சியும் இணைந்த ஒன்ருகும். பொருளாதாரம் மட்டிலும் தனி மனிதனையோ, சமுதாயத்தையோ வளர்த்து விடாது. அங்கே தோட்டப் புறங்களில் வாழ்வோரில் ஒரு பகுதியினர் பொருளைப் பேணிக் காத்து வாழத் தெரியாததால் நிரந்தரக் கடனாளிகளாக வாழ்கிருர்கள். மதுவருந்துதல் போன்ற தீய பழக்கங்களால் வளரமுடியாமல் தடுமாறுகிருர்கள். குழந்தைகளின் படிப்புப் பற்றியோ, எதிர்காலம்பற்றியோ ஆர்வம் காட்டுவதில்லை.

இவர்களுக்கெல்லாம் புற வாழ்க்கைச் சட்டங்கள் மட்டிலுமே துணை புரிய மாட்டா. மனிதரின் அகம் வளர்ந்தாக வேண்டும். அறிவிலும் பண்பாட்டிலும் நம்மவர் சிறந்து விளங்க வேண்டும். அந்தச் சிறப்பைத் தருவதில் மொழிக்கும் இலக்கியத்துக்கும் பெரும் பங்கு உண்டு.

ஆகவேதான் மொழிக்கும் இலக்கியத்துக்கும் உழைப்பவர்களை நாம் போற்றுகிறோம். இலக்கியப் புரவலராக ஒரு கால் நூற்றுண்டுக் காலத்துக்குமேல் இடைவிடாது உழைத்து வருபவர் முருகு. நம்முடைய பாராட்டுதலுக்குரியவர் அவர்.

சென்ற ஆண்டு நான் மலேசியாவுக்கு வந்திருந்தபோது 'தமிழ்நேசன்' எனக்கும் மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுப்பதில் ஆற்றிய பணி என்னல் மறக்க முடியாத பணி. தனிப்பட்ட அகிலனுக்காக முருகு அதைச் செய்ததாக நான் கருதவில்லை. தமிழ் இலக்கியத்தில் அவருக்குள்ள மெய்யான ஈடுபாடு அப்படி அவரைச் செய்ய வைத்தது.

மலேசியாவில் இருந்து நான் திரும்பி ஓராண்டுக்குமேல் ஆகிவிட்டாலும் இன்னும் நான் நெஞ்சால் அங்குதான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். 'பால் மரக் காட்டினிலே' என்ற பெயரில் நான் கலைமகளில் எழுதி வரும் நாவல் என்னை மலேசிய மண்ணில் வாழச் செய்கிறது. இதற்கெல்லாம் காரணம் நான் அங்கு பெற்ற பேரன்பு. அந்தப் பேரன்புக்குப் பின்னை உள்ளவர்களில் முக்கியமான ஒருவராக முருகு திகழ்ந்திருக்கிருரல்லவா?

முருகு ஓர் இலட்சியவாதி, ஆனல் செயலற்ற வறட்டு இலட்சியவாதியல்ல. செயல்வீரர். இலட்சியத்தை முன்னே வைத்து சுறுசுறுப்போடு இயங்குபவர். பொன்விழாக் காணும் அவர் உள்ளத்தாலும் உழைப்பாலும் இளைஞர். மலேசியத் தமிழ்ப் பெருமக்கள் அவர் உழைப்பை மென்மேலும் எதிர்பார்க்கிருர்கள். இறைவன் திருவருளால் அவர் நூறாண்டு உடல் வளத்தோடு வாழ வாழ்த்துகிறேன்.

முருகு வாழ்க!

புலவர் மணி - சித்தாந்த வித்தகர்
முரு. பழ. இரத்தினம் செட்டியார்

20 ஆண்டுகளுக்கு முன் முதன்முதல் திரு. முருகு அவர்களை மலாக்காவில் சந்தித்தேன். புன்னகை பூத்த முகம்; வெற்றிலை போட்டுக் கனிந்து சிவந்த வாய்; குளிர்ந்த பார்வை; உள்ளத்தைக் கவரும் இளமைத் தோற்றத்தோடு அவர் காட்சியளித்தார்.

தமிழ்நாட்டில் 'கோனாபட்டு' என்னும் ஊரில் பிறந்த அவர் புதுக்கோட்டையில் சில ஆண்டுகள் 'பொன்னி' இதழை நடத்திப் பத்திரிகைத் துறையில் அனுபவம் பெற்றிருந்தார். பகுத்தறிவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்டவர் என்றும் சமயம் அவர்க்கு அவ்வளவு பிடிக்காது என்றும் கேள்விப்பட்டிருந்தேன். சைவ சமயப் பணியில் முனைந்து நின்ற நான் அவரோடு மனம்விட்டு அளவளாவ இயலுமோ என்னும் ஐயத்தோடுதான் பேச்சைத் துவங்கினேன். ஆனால் ஐந்தே நிமிடத்தில் ஐம்பதாண்டு பழகியவர்கள்போல பல துறைகள் பற்றிக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டோம். சமயக் கருத்துக்களைத் தர்க்கரீதியாகச் சொல்லும்போது அவர் பேரார்வத்தோடு கேட்டதும் அல்லாமல் உடன்படவும் செய்தார். அடிமனத்தில் சைவப்பற்று வேரூன்றிக் கிடப்பதை அரை நொடியில் உணர்ந்து கொண்டேன். திருக்குறளும் சிலப்பதிகாரமும் அவர் நெஞ்சை அள்ளிய நூற்கள் என அறிந்து மகிழ்ந்தேன். திருமுறைப் பாக்கள் அவர் உள்ளத்தை நெகிழ்விப்பதையும் கண்டேன். தமிழ் மகன் எந்த அறிவியல்வாதியாக இருந்தாலும் சைவத்தை விட்டு விலக வாராது என்னும் உண்மை 'பளிச்சென' எனக்குப் புலனாயது.


மலாக்காவிலிருந்து சிங்கப்பூர் சென்ற அவர் 'தமிழ் முரசு' பத்திரிகையில் துணையாசிரியாகச் சில ஆண்டுகள் பணியாற்றினார். நான் சிங்கப்பூர் செல்லும்போதெல்லாம் அவரோடு அளவளாவி மகிழ்வேன்.

சுவைபுற நிகழ்ச்சிகளை வரையறை செய்து எழுதுவதில் அவர் வல்லவர். சிங்கப்பூர் வானொலியில் நீதிநூற் கருத்துக்களை இனிய தமிழில் பொருட் செறிவோடு விளக்கிப் பல உரைகள் ஆற்றினார். அவை இன்று நூல்வடிவம் பெற்று விளங்குகின்றன. தமிழ் இலக்கியங்களில் அவர்க்குள்ள ஆழ்ந்த புலமையையும் தெளிவையும் அவை. வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆங்கிலச் செய்திக் கருத்துக்களை இயல்பான ஓட்டம் மிக்க நடையில் மொழிபெயர்க்கும் ஆற்றல் அவரிடம் உண்டு. இதனால் 'தமிழ் முரசில்' அவர் தக்க இடம் பெற்றார். பழகுவதற்கும் கலந்து ஆலோசிப்பதற்கும் மிகவும் ஏற்றவர் எனத் 'தமிழ் முரசில்' இருந்த துணை ஆசிரியர் பலர் என்னிடம் அடிக்கடி சொல்வர்.

சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூர் வந்து 'தமிழ் நேசன்' பத்திரிகையில் தலைமை ஆசிரியாகப் பதவி ஏற்றார். அன்றிலிருந்து 'தமிழ் நேசன்' புதிய தோற்றத்தோடு வெளிவரலாயிற்று; வெளிவருகின்றது.

ஆங்கில நாள் இதழ்கள் போல அன்றாடச் செய்திகளைச் சுடச்சுடத் 'தமிழ் நேசன்' வழங்குவதற்குக் காரணம் முருகு அவர்களின் அயரா உழைப்பே என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஞாயிறு மல



டாக்டர் மு. வ. வை அவரது இல்லத்தில் 1965-ல் சந்தித்தபோது...

ரில் சிறுகதைகளுக்கும் கட்டுரைகளுக்கும் நிறைய இடம் அளித்து மலேசிய எழுத்தாளர்களை அவர் ஊக்குவித்து வருகிறார். சிறுகதைகளுக்குப் பரிசுப் போட்டி வைத்து மலேசியாவும் தமிழ்ச் சிறுகதை இலக்கிய வளர்ச்சியில் உரிய பங்காற்றுகிறதென்பதைத் தமிழக எழுத்தாளர்கள் உணரும்படி செய்தார்; செய்து வருகிறார். மலேசியத் தமிழ் எழுத்தாளர்கள் அவரைத் தம் வழிகாட்டியாகக் கொண்டு செயலாற்றி வருகின்றனர்.

தேசிய உணர்வையும் ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதில் முருகு மிக்க முனைப்போடு செயலாற்றி வருகிறார். எல்லா இன மக்களையும் ஒருங்கிணைத்துச் சகோதர பாசத்துடனும் புரிந்துணர்வுடனும் 'நாம் மலேசியர்' என்னும் நினைவோடும் தமிழ் மக்கள் வாழவேண்டும் என்பதை முருகு தாம் எழுதும் 'தமிழ் நேசன்' தலையங்கங்களில் இடைவிடாது வற்புறுத்தி வருவதுகண்கூடு. பொறுப்புமிக்க நாளிதழ் ஆசிரியர் என்னும் பெயர் அவர்க்கு என்றும் உண்டு. உணர்ச்சி வயப்படாமல் நிதானத்தோடு தலையங்கம் எழுதுவது அவர் இயல்பு. 'மலேசிய இந்தியர் காங்கிரஸ்' ஸ்தாபனம் 'தமிழ் நேசன்' வாயிலாகவே தமிழ் மக்களுடன் பெரிதும் தொடர்பு கொள்கிறதென்பதை மறுக்க இயலாது. அரசாங்கத் தூதுக்குழுக்கள் வெளிநாடுகள் செல்லும்போது 'தமிழ் நேசன்' பிரதிநிதியாக முருகு பலமுறை உடன் சென்று வந்துள்ளார். இதனால் அவர் அரசியல் அறிவு பரந்த அனுபவத்தோடு மிளிர்கிறது. இந்தோனேஷியாவிற்கும் ரஷியாவிற்கும் சீனாவிற்கும் அவர் சென்றுவந்து தீட்டிய பயணக்கட்டுரைகள் சுவை மிகுந்தவை; இலக்கியம் போலப் போற்றத் தகுந்தவை.

தமிழ்ப்பள்ளி நிதிக்கு ஒரு கோடி வெள்ளி திரட்ட அவர் இப்பொழுது பெருமுயற்சி செய்து வருகிறார். இந்த ஒரு தொண்டே மலேசியத் தமிழுலகம் அவரை என்றும் மனத்திடை வைத்துப் போற்றப் போதுமானதாகும்.

ஒருநாள் 'தமிழ் நேசன்' அலுவலகத்தில் பேசிக்கொண்டிருந்தேன். முருகு ஒரு

போராட்டத்தில் வேறுபாடில்லை!

மலேசியாவின் சிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர்களில் ஒருவரும் இலக்கிய கர்த்தாக்களில் ஒருவருமான 'தமிழ் நேசன்' தலைமையாசிரியர் முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிரமணியன் அவர்களுக்குப் பொன்விழா கொண்டாடப்படுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ் நேசன் தினசரியும் முத்தமிழ் வித்தகரும் இந்நாட்டுத் தமிழ் மக்களுக்கும், மலேசிய தேசியத் தன்மைக்கும் ஆற்றியிருக்கும் தொண்டுகள் அளவிடற்கரியன. பொதுவாகப் பத்திரிகையாளர்களுக்கும், யுத்த களத்தில் போரிடும் மாவீரர்களுக்கும் இடையே இடத்தைப் பொருத்த வேறுபாடே தவிர போராட்டத்தின் தன்மையைப் பொருத்தவரை அதிக வேறுபாடு இல்லை.

தேச நலனுக்காக தங்களது சுக — துக்கங்களை ஒதுக்கிவைத்து எதிரிகளுடன் துப்பாக்கிக் கொண்டு மல்லாடும் வீரர்கள் போன்றே, சமுதாய நலனுக்காகவும் பத்திரிகையாளர்கள் தங்கள் சுக துக்கங்களை மறந்து பேனாவின் துணை கொண்டு தீயசக்திகளுடன் போராடுகின்றனர் பத்திரிகையாளர்கள்.

எனவே மூத்த தமிழ்ப் பத்திரிகையாளரான திரு. முருகு சுப்பிரமணியத்திற்கு எடுக்கப்படும் மணிவிழா இந்நாட்டுப் பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

இச்சந்தர்ப்பத்தில் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களுக்கு மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அவர்தம் சேவை தொடர்ந்து இந்நாட்டு மக்களுக்குக் கிடைக்க எல்லாச் செல்வங்களையும் தந்தருள இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஜி. பெருமாள்,
துணைப் பொதுக் காரியதரிசி,
தே. தோ. தொ. சங்கம்.

தாளை எடுத்தார். 'சைவ — விளக்கம் கேள்வி—பதில்கள்' என எழுதினர்; என்னைப் பார்த்தார். 'ஞாயிறு மலரில் வாரந்தோறும் இப்பணியை நீங்கள் செய்ய வேண்டும்' என்றார். 'சைவத்தை மலேசியாவின் மூலை முடுக்குகளில் உள்ள தமிழ் மக்களும் நன்குணரும்படி எளிய நடையில் நீங்கள் எழுத வேண்டும். என்ன சொல்கிறீர்கள்?' என அதட்டினர். அவரின் திட்டமிடும் ஆற்றல் கண்டு வியந்தேன். ஞாயிறு மலரில் 'சைவ விளக்கம்' வரத் துவங்கியது. தோட்டப்புறத்துப் பாட்டாளிமக்கள் இன்று சைவ சித்தாந்தம் பேசுகின்றனர். தமிழ் நாட்டில் தமிழ் இலக்கியம் பயின்றவர்களிடையே கூடச் சைவ சித்தாந்தம் பற்றி பேசுவோர் குறைவு. மலேசியாவில் சித்தாந்த முழக்கம் செய்த ஒரே பத்திரிகை 'தமிழ் நேசன்'தான். முருகு அவர்கள் செய்து வருகிற பணிகள் பலவற்றுள் இச்சமயப் பணியும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'முருகு' என்னும் சொல் அழகு, இளமை, இனிமை எனப் பல பொருளையும் குறிக்கும். இவை அத்தனையும் நிறைந்த முருகு சுப்பிரமணியன் பல்லாண்டு பல்லாண்டு எல்லா நலனும் பெற்று இனிது வாழ முருகப்பெருமான் திருவடி மலர்களை நெஞ்சால் நினைந்து மொழியால் வாழ்த்தி மெய்யால் வணங்குகிறேன்.

முருகு நீடுழி வாழ்க!



முருகுவின் சிகரமான தமிழ்ப்பணி வாழ்க!

"வேத நூல் பிராயம் நூறு" என்று சொல்லுவார் தொண்டரடிப் பொடி ஆழ்வார். அதில் ஐம்பது ஆண்டுகாலப் பொன்விழா சிறப்பான ஒன்றாகும். மனிதன் நிறைவில் ஒரு பகுதியை முடித்து, மறு பகுதியைத் தொடங்கும் காலம் அது. முருகுவின் வாழ்வில் முன் பகுதி சிறப்புற்று விளங்கியதைக் காணுகின்றோம். மறுபகுதி ஒளிமயமாய் இருப்பதையும் பார்க்கிறோம்.

தனது இளம் வயதிலேயே பத்திரிகைத் துறையில் நுழைந்து பண்பட்டவர் முருகு. அறிஞர் தம் கூட்டுறவில் அடித்தளம் பெற்றவர். தமிழ் நேசனில் பொறுப்பேற்ற பின்னர் அவர் செய்துள்ள பணிகள் ஏராளம்.

அன்றைய நேசனைக் காட்டிலும் இன்றைய நேசன் தரத்தில் எத்தனையோ பங்கு உயர்ந்து நிற்பதைப் பார்க்கிறோம். செய்திகளைத் தேர்ந்து வகைப்படுத்தித் தருவதில், பல சுவையும் மிளிர ஞாயிறு மலரை வழங்குவதில் - அவரது கைவண்ணத்தைக் காணுகின்றோம்.

சமூகத்தில் நலிந்து பொருள் தேவையான இடங்களுக்குப் பொருள், சிறுகச் சிறுகப் பெருக அவரது எழுத்தே தூண்டுகோலாகும். தமிழ் மொழி வளர - நீடித்து வாழ - தமிழ்ப் பள்ளிகள் சிறக்க அவரது பணியின் சிகரமாகத் திகழ்கிறது "தமிழ்ப் பள்ளி மாணவர் உதவி நிதி"

சமுதாய மேம்பாட்டுக்கு அவரது பேனா என்றும் வற்றாத ஊற்றாய் விளங்கவும், அவர் பல்லாண்டு பல்லாண்டு வாழவும் அன்னைதன் மலரடி போற்றிப் பணிகின்றேன்.

இரா. சண்முகவேலு,
ஏ.எம்.என்., பி.ஜே.கே., ஜே.பி.
தலைவர், ம. இ. கா. பேரா மாநிலம்.
பேரா மாநில சட்டமன்ற உறுப்பினர்.

தமிழ்ச்சாதியின் காவலர்

ரெ. கார்த்திகேசு

விதியே! தமிழச் சாதியை எவ்வகை
விதித்தாய் என்பதன் மெய்யெனக்
குணர்த்துவாய்!
— (பாரதியார்)

ஓர் இனத்தின் எதிர்காலத்தை, விதியை நிர்ணயிப்பதற்கும் திசை திருப்பிவிடுவதற்கும் சிந்தனையாளர்கள் அவ்வப்போது தோன்றிக் கொண்டு வருகிறார்கள். தமிழச் சாதியின் தலைவிதி பற்றி மிகவும் கவலைப்பட்டவர் பாரதியார்.

"நாட்பட நாட்பட நாற்றமும் சேறும்
பாசியும் புதைந்து பயன் நீர் இலதாய்
நோய்க் களமாகி அழிகெனும் நோக்கமோ?
விதியே விதியே தமிழச் சாதியை
என் செய நினைத்தாய் எனக் குறையாயோ?"

என்று உண்மையிலேயே மனம் நொந்து அவர் பாடினார். ஆப்பிரிக்கா, இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள், மலாயா, பர்மா எனப் பல நாட்டிற்கும் காலனித்துவ வாதிகளிடம் கடைக் கூலிகளாக இருக்கக் கூட்டம் கூட்டமாக விரட்டிச் செல்லப் பட்ட தன் சக இனத்தவரைக் கண்டு பாரதியார் வாய்விட்டுக் கதறியதில் வியப்பில்லை.

பாரதியார் இப்படிப் பாடிய 60—70 ஆண்டுகளுக்குப் பின் அவருடைய அந்த பரிதாபப் பாடலுக்கு இலக்கான சமுதாயத்திலிருந்து கொஞ்சம் தலையைத் தூக்கிப் பார்க்கும் நமக்கு கொஞ்சம் ஆறுதலும், உற்சாகமும் தோன்றுகிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது. "நாற்றமும் சேறும், பாசியும் புதைந்து" இருந்த ஒரு நிலையை விட்டு நாம் கொஞ்சம் முன்னேறிவிட்டோம். ஒரு காலத்தில் 'நோய்க் களமாக' இருந்தது உண்மை. மலேரியாவுக்கும், வாந்திபேதிக்கும் பாம்புகளுக்கும் நாம் கொடுத்துள்ள காணிக்கை அதிகம். ஆனால் இந்த இனத்தின் உள்ளே உள்ள உயிர் வாழ்வுத் திறத்தால் நாம் பாரதியார் பயந்ததுபோல அழிந்து விடவில்லை; பிழைத்துவிட்டோம்.

ஓர் இனம் எப்போது அழிகிறது? ஓர் இனத்தின் உறுப்பினர்களின் உயிர்களைப் பறித்துவிடுவதால் அந்த இனம் அழியும் என்று சொல்லிவிட முடியாது. ஆனால் ஓர் இனம் தனது மொழி, பண்பாடு, கலைகள் ஆகியவற்றை இழந்து விடும்போதுதான் தனது அடையாளத்தை அழித்துக்கொள்கிறது. இதுதான் ஓர் இனத்தின் உண்மையான சாவு ஆகும்.

ஆகவேதான் இனக் காவலர்களாகவும், சமுதாயக் காவலர்களாகவும் தோன்றுபவர்கள் அந்த இனத்தின் மொழி, பண்பாடு, கலைகள் ஆகியவற்றினைக் காப்பதில் மிகவும் அக்கறை காட்டுகின்றார்கள்.

திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களின் பெயரைச் சொல்வதற்கு இவ்வளவு பெரிய பீடிகை போதும் என நினைக்கிறேன்.

தமிழச் சாதியின் அடையாளத்தைக் காப்பாற்றித் தருவதில் இன்று முருகு சிறப்பான பணியாற்றி வருகிறார். அவரால் வளர்க்கப்படும் 'தமிழ்நேசன்' உண்மையிலேயே தமிழுக்கு நேசனாக இருந்து வருகிறது. தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழ்க் கலைகள் ஆகிய துறைகளில் செயல்களைத் தொடங்குவதற்கும் தொடர்வதற்கும், முடுக்கிவிடுவதற்கும், முன்னேற்றுவதற்கும், வளர்ப்பதற்கும், வாழ்த்துவதற்கும் இன்று தமிழ் நேசனையே நாம் பெரிதும் நாட வேண்டியுள்ளது.

தமிழ், தமிழர் என்று பேசுவது ஒரு குறுகிய நோக்காக இந்த நவீன காலத்தில் தோன்றலாம். அறிவியலும், தொழில் நுட்பமும் இன்று உலகைச் சுருக்கிவிட்டன; தூரங்களைக் குறைத்துவிட்டன; நோக்கங்களை விரிவாக்கிவிட்டன; சுருக்கமாக உலகை ஒன்றாக்கிவிட்டன; ஆகவே இன, மொழி வேறுபாடுகள் குறைக்கப்பட வேண்டும் என்ற குரல் எங்கும் ஒலிக்கிறது.

இது உண்மை. இந்த நோக்கங்கள் தமிழர்களின் நோக்கங்களினின்றும் பெரிதும் வேறுபட்டவை இல்லை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றும் மிகப் பழங் காலத்திலேயே பரந்த கொள்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

ஆனால் பரந்த நோக்கம் என்பது நமது அடையாளங்களைத் துடைத்தொழித்துவிட்டு 'பரந்த மனிதன்' என்று நம்மை அறிவிப்பது என்று ஆகாது. உடை வேறுபாடுகளைக் குறைக்கவேண்டும் என்பதற்காக உடைகளைக் களைந்தெறிந்து விடுவது சரியான வழியல்ல.

எந்த மொழியும், கலையும், பண்பும் மனிதனைத் தனிப்படுத்துவதாக இருக்கக் கூடாது; ஆனால் அந்த மொழி, கலை, பண்பின் வழியாக மனிதன் பூரணத்துவம்



இந்திய நிதியமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் உணவு அமைச்சராக இருந்த போது புதுடில்லியில் (1965) இச்சந்திப்பு நடந்தது.



தேசிய வீரர் நிதிக்கு நேசன் திரட்டிய நன்கொடைக்கான காசோலையை உள்துறை அமைச்சர் டான்ஸ்ரீ கசாலி ஷாபியிடம் நேசன் ஆசிரியர் முத்தமிழ் வித்தகர் முருகுவும் நேசன் இயக்குநர் புலவர் மு. சேதுராமனும் வழங்குகின்றனர்.

பெறவேண்டும். அந்த பூரணத்துவ நிலையில் மனிதனுக்கு மனிதன் உள்ள வேறுபாடுகள் அடியோடு குறைந்து, மறைந்து போவதைக் காணமுடியும். தனது சொந்த அடையாளத்தை நிலைப்படுத்தி வலுப்படுத்திக்கொண்ட மனிதன்தான் இன்னொரு அடையாளத்தை உடைய மனிதனுடன் சமமாகப் பழகலாம், பேசவும் முடியும்.

முருகு ஆழ்ந்த சமுதாய சிந்தனை உடையவர். தமிழ்ச் சமூகத்தை—தமிழ் பேசும் இந்திய சமூகத்தை ஓர் ஆற்றல் மிக்க சமுதாயமாக ஆக்க வேண்டும் என்பதில் முழுமூச்சான ஆர்வம் காட்டுபவர். அதோடு அந்த சமுதாயத்திற்கு அரசியலிலும் நியாயமான இடம் கிடைக்க வேண்டும் என்பதில் ஆழ்ந்த அக்கறை உடையவர்.

முருகுவின் சமுதாயப் பயிற்சி தமிழவேள் கோ. சாரங்கபாணியின் பட்டறையில் பெறப்பட்டதாகும். அவரே கூறுவது போன்று 'தமிழ் முரசு இதழில் துணையாசிரியராக ஏழாண்டு காலம் பணியாற்றியபோது தமிழவேள் தலைமையின் கீழ் பத்திரிகைத் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்றதோடு சமுதாயப் பொதுவாழ்விலும் என்னை ஈடுபடுத்திக் கொள்கிற பரந்த வாய்ப்பும் எனக்குக் கிட்டிற்று. சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் வாழ்கின்ற தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு பிரச்சினைகளையும் மனத்தில் கொள்வதற்குத் தமிழவேள் நல்கிய இந்த வாய்ப்பு எனக்குப் பெரிதும் பயன்பட்டது. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரோடு நேருக்குநேர் பழகுவதற்கும், கலந்துரையாடுவதற்கும், எண்ணற்ற ஊர்களில் பல்வேறு கூட்டங்களில் பங்கு கொள்வதற்கும் இது எனக்கு வாய்ப்பை வழங்கியது". (தமிழ் ஒளி 1973-74).

பல வகைகளில் முருகுவின் மொழி, சமுதாயச்சேவைகள் கோ.சா.வின் முயற்சியின் தொடர்ச்சியே ஆகும். கோ.சா.விற்குப்பிறகு முருகு இல்லாமற்போயிருந்தால் தமிழ்ச் சமுதாயத்தின் குரல் பல

இடங்களில் கேட்காமலேயேபோயிருக்கும்.

முருகுவிடம் எனக்கு உள்ள பழக்கம் பெரும்பாலும் இந்நாட்டுத் தமிழ் எழுத்துத்துறை, தமிழ் எழுத்தாளர்கள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டது; இந்தத் துறையில் அவர் கொடுத்துள்ள ஆதரவினுல்தான் தமிழ் எழுத்துத்துறை இந்த அளவாவது வளர்ச்சிபெற்றுத் திகழுகின்றது. தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் அவர் பல ஆண்டுகளாகத் தலைவராக இருந்து சேவை செய்துள்ளார். தம் பத்திரிகையின் மூலம் சங்கத்தைப் பரவலாக அதன் எல்லா முயற்சிகளிலும் ஆதரித்துள்ளார்.

தமிழ்நேசன் பவுன் பரிசுத் திட்டம் இந்த நாட்டு எழுத்தாளர்களிடையே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நாட்டு எழுத்தில் மண்ணின் மணம் கமழ வேண்டும் என்று எழுப்பப்பட்ட குரல்களுக்கு பலத்த ஆதரவு கொடுத்தார் அவர். இந்த நாட்டின் எழுத்துக்களில் சமுதாயப் பிரச்னைகள் இடம்பெறவேண்டும்; அவை சமுதாய விழிப்பினைக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கத்தைச் சாதிப்பதில் பவுன் பரிசுக் கதைகள் இயக்கம் நல்ல பலனைத்தந்தது.

இதற்கெல்லாம் மேலாக எழுத்தாளர் அகிலனை இந்த நாட்டுக்கு அழைக்க எழுத்தாளர் சங்கத்தின் மூலமாக நான் முயற்சிகள் மேற்கொண்டபோது அதற்கு முழு மூச்சான ஆதரவைத்தந்தார் முருகு. அகிலனின் வருகை இந்த நாட்டு எழுத்தாளர்களின் ஏகோபித்த திருவிழா போன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டதற்கு தமிழ்நேசன் அளித்த ஆதரவு ஒரு காரணம் ஆகும். மேலும் இந்த நாட்டு எழுத்துக்களுக்கு தமிழ்நாட்டு அரசின் பரிசு கிடைக்கவேண்டும் என்று அவர் எழுப்பிய கோரிக்கைக்குக் கைமேல் பலன் கிடைத்ததையும் இந்நாட்டு எழுத்தாளர்கள் அறிவார்கள்.

அரசியலில் தமிழ்நேசனின் பணி ஒரு மூக்கணாங்கயிறுபோலப் பயன்பட்டு வந்துள்ளது. இந்த நாட்டில் இந்தியர்களுக்குக் கிடைத்துள்ள அரசியல் பங்கு உண்மையில் இந்திய மக்களுக்கும் பயன்படுவதாக இருக்கவேண்டும் என்பதில் அவர் ஆர்வம் உள்ளவர். அப்படி இருக்கவேண்டிய அரசியல் சுயநல நோக்கங்களுக்கான அடிபிடிச் சண்டையாக மாற்றப்படும்போது அதைக் கண்டிக்க அவர் தவறியதில்லை. அதேபோல அரசியல் தலைவர்கள் தங்கள் பணியை மறந்து சில்லறைப் பதவிச் சண்டைகளில் ஈடுபடும்போது, எது நியாயம் என்பதை எடுத்துரைக்கவும் அவர் தயங்கியதில்லை.

முருகு நூலகங்கள்

இந்தோனேஷியா மேடானில் 'முருகு சுப்பிரமணியன் நூலகம்' ஒன்று சுமார் பத்து ஆண்டுகளாக இயங்கிவருகிறது.

கோலாலம்பூர், கம்போங் பிரம் பாங்கில் 'முருகு நூலகம்' ஒன்று இவ்வாண்டு துவக்கப்பட்டது.

இந்த இடத்தில் யாருக்கு அவர் சார்பாக இல்லையோ அவர்களின் மூர்க்கமான சாடுதல்களையெல்லாம் அவர் வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறார். ஆனால் இந்த எதிர்ப்புக்கள் அவருடைய கொள்கைகளை மேலும் இறுகச்செய்துள்ளனவே தவிர தளர்த்தியதில்லை.

பொன்விழா காணும் முருகுவின் மொழி, சமுதாயப்பணிகள் பல அம்சங்களைக் கொண்டவை. இவை எல்லாவற்றிலுமே அவருக்குத் தூரநோக்கு உண்டு. அந்தத் தூரநோக்குகளை அடைவதற்காக அவர் கையாளுகின்ற சில வழிகள் குறுகிய நோக்கம் கொண்டவை என்று சாடப்படுகின்றன.

இந்த நாட்டில் தமிழ்ச்சாதியின் மொழி, பண்பாடு, கலைகள், அரசியல் ஆகியவற்றின் விதி நன்றாக இருக்கவேண்டும் என்ற உண்மையான ஆவல் அவர் உள்ளத்தில் இருக்கின்றது. இந்த ஆவலுடன் இந்தத் துறைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், தலைமைத்துவம் ஏற்று நடத்திச் செல்பவர்கள் ஆகியவர்களைக் கட்டுப்படுத்தும் ஒரு சக்தியாக அவர் விளங்கி வருகின்றார். இந்தக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் இந்தத் துறைகளின் வளர்ச்சித் தான்தோன்றியாகவும் தாறுமாறாகவும் அமைந்துவிடும் சாத்தியங்கள் உள்ளன.

ஆகவே முருகுவின் அனுபவம், முதிர்ச்சி, சமுதாயப்பற்று, எதிர்காலம் பற்றிய தூரநோக்கு ஆகியவை இந்த நாட்டிற்குத் தேவையானவையாகும்.

பொன்விழா காணும் அன்னர் நீடு வாழ்க!



சின்னப்பயல்

முருக சுப்பிரமணியன்

குருசாமி காரியாலய வேலைமுடிந்து வீட்டுக்கு வந்தவன், வந்ததும் வராததுமாக எதிர் வீட்டு ஆறுமுகத்தைப் பார்க்க ஓடினான்.

ஆறுமுகம் குருசாமியின் அந்தரங்க நண்பன். காரியாலயத்திற்குப் போகிற நேரம் தவிரப் பாக்கி நேரங்களில் அவன் அங்குதான் குடியிருப்பான்.

அரசாங்கக் காரியாலயத்தில் குருசாமி குமாஸ்தா வேலை பார்த்துவந்தான். ஏதோ ஓர் அளவான வருமானம். வாழ்க்கை உருண்டுகொண்டிருந்தது.

அன்றாடம் காரியாலயத்தில் நடக்கும் செய்திகளை அப்படியே ஆறுமுகத்திடம் பாடம் ஒப்பித்தால்தான் குருசாமிக்கு இரவு நல்ல தூக்கம்வரும். அந்த வழக்கப்படி அன்று ஏதோ சுவையான நிகழ்ச்சியை வர்ணித்துக்கொண்டிருந்தான்.

நண்பர்களின் சுவையான பேச்சு ஆரம்பமாகிச் சில நிமிஷங்கள்தான் ஆகியிருக்கும். அப்போது குருசாமியின் தாயார் வேர்க்க விறுவிறுக்க அங்கு வந்தார்கள். தாயாரைக் கண்டதும் குருசாமிக்குத் திகைப்பாகிவிட்டது. பேச்சை நிறுத்திவிட்டு "என்னம்மா" என்றான்.

"சற்றுமுன் தெருவில் விளையாடிக்கொண்டிருந்தான் சின்னப்பயல். அதற்குள் எங்கோ போய்விட்டான், பக்கத்து வீடுகளிலெல்லாம் தேடிவிட்டேன். காணவில்லை ....." என்று குருசாமியின் தாயார் மீனாட்சியம்மாள் இரைக்க இரைக்கச் சொன்னார்கள்.

குருசாமிக்கு ஒன்றும் புரியவில்லை. சின்னப் பயலிடம்தான் அவனுக்குக் கொள்ளைப் பிரியம். அவர்கள் வீட்டில் அவன் அப்பா "பிள்ளை"!

நண்பனிடம்கூடச் சொல்லிக்கொள்ளவில்லை. தாயாரை அழைத்துக்கொண்டு வெளியே வந்தான். "அம்மா நீ வீட்டில் போய் இரு. நான் கடற்கரையில் போய்ப் பார்த்துவருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

குருசாமியின் நினைவெல்லாம் "சின்னப் பயல்" மீது மொய்த்திருந்தது. சின்னப்பயல் இரண்டாவது பையன். அவனுக்கு இட்ட பெயர் பாண்டியன் என்றாலும் வீட்டில் சின்னப்பயல் என்றுதான் அவனை எல்லோரும் கூப்பிடுவது வழக்கம். மூத்தவன் சாது, சின்னப்பயலுக்குப்பிறகு ஒரு தம்பி, அவன் கைப்பிள்ளை.

பாண்டியனுக்கு நான்கு வயதிருக்கும். ஒரு நிமிஷம் "சும்மா" இருக்கமாட்டான், ஏதாவது ஆட்டபாட்டம் வம்பு, வழக்கு, தொல்லை, சண்டைபோட்டுக்கொண்டுதான் இருப்பான். "தீராத விளையாட்டுப்பிள்ளை" என்று பாரதியார் தீட்டியிருக்கிற சித்திரம் அவனுக்கு அப்படியே பொருந்தும்,

குருசாமி வீடு கடற்கரைக்குச் சமீபம். கடற்கரைக்குப் பிள்ளைகளை அடிக்கடி அவன் மனைவி அழைத்துப்போவாள். அதனால் ஒருவேளை "சின்னப்பயல்" அங்கு ஓடிப் போயிருக்கலாமென்று அவன் நினைத்தான்.

கடற்கரையில் அன்று அவ்வளவு கூட்டமில்லை. எனவே குருசாமிக்கு மகனைத் தேடுவது எளிதாக இருந்தது. அங்கு காற்று வாங்கிக்கொண்டிருந்தவர்களிடம் ஒருவர் பாக்கிவிடாது விசாரித்தான்.

அங்கு தேங்காய், மாங்காய், பட்டாணி விற்றுக்கொண்டிருந்தவர்களையும் விடவில்லை; ஆனால் யாரும் பாண்டியனைப் பார்த்ததாகக் கூறவில்லை. சிறு குழந்தை எதுவும் அங்கு தனியே வரவில்லையென்று அவ்வளவு பேரும் ஒரே மாதிரி சொன்னார்கள்.

குருசாமிக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. "பிள்ளை வேறு எங்கு போயிருப்பான்?" என்று யோசித்தான். அது தவிர அப்போது நகரத்தில் "பிள்ளை பிடிக்கும்" திருடர்கள் பற்றிய வதந்தியும் உலாவியதால் அவனுக்கு கவலை முளைத்தது.

"அப்படி எந்தத் திருடனாவது சின்னப் பயலைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால்..." இதனைக் கற்பனையில்கூட நினைத்துப்பார்க்க முடியாமல் தடுமாறினான் குருசாமி. அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது.

கதிரவனொளி மங்கி நகரில் இருள் படர ஆரம்பித்தது. சாலையில் செல்லும் கார்களின்



வெளிச்சம் இடையிடையே மின்னிக்கொண்டிருந்தது. வீட்டை நோக்கி நடந்தான் குருசாமி.

வீட்டில் தன்னைப் பார்த்ததும் "சின்னப் பயல் எங்கே?" என்று கேட்கும் அம்மாவுக்கும் "தம்பி அகப்பட்டானா?" என்று வினவும் மனைவிக்கும் அவன் என்ன பதில் சொல்வான்?

ஃ ஃ ஃ

பழைய சம்பவமொன்று அவன் மனத்தில் பளிச்சிட்டது.

அன்று அவனுக்கும் சரோஜாவுக்கும்—அதுதான் அவன் மனைவியின் பெயர்—பெரிய தகராறு.

பள்ளிக்கூட விடுமுறைக்கு மூத்தவனைத் தன் தாயார் வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று ஒரே பிடியாய் நின்றாள் சரோஜா. குருசாமிக்கு அது விருப்பமில்லை. ஒரு வாரமாகவே புகைந்துவந்த இந்த குமுறல் அன்று உச்சகட்டத்தை அடைந்தது.

வேலை முடிந்து மாலையில் வீட்டுக்கு வந்தான் குருசாமி. வழக்கமாகச் சிரிக்கும் முகத்தோடு எதிர்கொண்டழைக்கும சரோஜாவை முன்கட்டில் காணவில்லை. அவன் தாயாரும் எங்கோ வெளியில் போயிருந்தார்கள்.

பிள்ளைகள் மட்டும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். கடைசிப் பிள்ளை தொட்டியில் தூங்கியது.

மூத்த பையன் செல்வத்தைக் கூப்பிட்டான் குருசாமி. 'உன் அம்மா எங்கேயடா?' என்றான். 'அம்மா அதோ......' என்று சாமான் அறைப் பக்கம் கையைக் காட்டினான் செல்வம்.

சரோஜா அந்த அறையில் பொருமியபடி படுத்துக் கொண்டிருந்தாள். குருசாமிக்குத் தன் மனைவியின் பிடிவாத குணம் கட்டோடு பிடிக்கவில்லை. தான் எவ்வளவே சொல்லியும் நினைத்ததைச் சாதிக்கச் சரோஜா முயல்

வது அவனுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியது.

அந்த ஆத்திரத்தை மேலும் தூண்டும் வகையில் 'அம்மா இன்னைக்கு சாப்பிடவே இல்லே அப்பா' என்று புதுத் தகவலை வெளியிட்டான் செல்வம். 'ஆமா அப்பா' என்று அதை ஊர்ஜிதம் செய்தான் சின்னப்பயல். இப்படிச் சொல்லிவிட்டு அண்ணனும் தம்பியும் கைகொட்டிச் சிரித்தார்கள். அப்பாவின் கோபம் அவர்களுக்கு என்ன தெரியும்?

குருசாமி முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டு தன் அறைக்குப் போனான். விளக்கைக் கூடத் தட்டிவிடாமல் பேயறைந்த மாதிரி உட்கார்ந்திருந்தான்.

அம்மா ஒரு அறையில்! அப்பா ஒரு அறையில்! பிள்ளைகளுக்கு எல்லாம் புதிராக இருந்தது. விளையாட்டை நிறுத்திவிட்டு அவர்களும் 'உம்'மென்று ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டார்கள்.

இந்த 'மௌன நாடகம்' நடந்துகொண்டிருந்தபோது, நாள் தவறாமல் வீட்டுக்கு வரும் நண்பனைக் காணவில்லையே, காரணம் என்னவென்று விசாரிப்பதற்காக எதிர் வீட்டு ஆறுமுகம் அங்கே வந்து சேர்ந்தான்.

வீட்டில் இருள் சூழ்ந்திருந்தது. ஆறுமுகத்தைக் கண்டதும் 'மாமா வணக்கம்' என்று செல்வமும் பாண்டியனும் அவனைப் போய் சூழ்ந்துகொண்டார்கள்.

'அப்பா இல்லையா?' என்று கேட்டான் ஆறுமுகம்

பாண்டியன், 'அப்பா இந்த அறை! அம்மா அந்த அறை! இரண்டு பேரும் சண்டை. மாமா, பேசமாட்டாங்க' என்றான்.


'ஆமா மாமா' என்றான் செல்வம்.

'என்னடா சண்டை?' ஆறுமுகம் கேட்டான்.

'எங்களுக்கு என்ன தெரியும்? வாங்க மாமா, இரண்டு பேருக்கும் சமாதானம் பண்ணி வைங்க' என்று பாண்டியன் பெரிய மனிதர் தோரணையில் பேசினான்.

ஆறுமுகத்திற்கு சிரிப்பு வந்துவிட்டது பாண்டியனைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டான்.

இந்தப் பேச்சுகள் காதில் விழுந்ததுமே சரோஜா படுத்திருந்தவள் எழுந்து காப்பி தயாரிக்க ஆரம்பித்துவிட்டாள். குருசாமி முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக்கொண்டு சிரிப்பை வரவழைத்துக்கொண்டு ஆறுமுகத்தை வரவேற்க அறையை விட்டு வெளியே வந்தான்.



சிங்கப்பூர் தமிழர் சீர்திருத்த சங்கத்தில் தமிழவேள் கோ. சாரங்கபாணி தலைமையில் வயிநகரம் வே. ராமநாதன் செட்டியாருக்கு நடந்த வரவேற்புக் கூட்டத்தில் சங்கத்தின் செயலாளராக இருந்த முத்தமிழ்வித்தகர் முருகு வரவேற்புரையாற்றுகிறார்.

(முருகு அவதாரம்)

-(பாதாசன்)-

தமிழ்குறைக்கப் படவேண்டும் என்போர் முன்னே
தணற்கண்ணான் 'காளி'யென வடிவு கொண்டான்!
தமிழ்ப்பள்ளி மாணவர்தம் நலத்தைக் காக்க
சகலகலா வல்லிஅந்தச் 'சக்தி' ஆனான்
அமைதியொடு வளமாக நாமம் வாழ
அரசியலில் நமக்கெல்லாம் 'குகனாய்' வந்தான்
நமதரசி யல்வாழ்வில் தவறு கண்டால்
நயமாகக் கடிவதிலே 'குறளோன்' ஆவான்

வல்லிருளாய் உள்ளநம தறியா மையை
மணிக்கருத்தால் அழிப்பதிலே 'திருமால்' ஆனான்.
நல்லஎழுத் தாளர்களின் உருவாக் கத்தில்
நான்முகனாய் உருவெடுத்தான்! தேசி யத்தில்
உள்ளபொது நலன்காக்க 'சிவனாய்' வந்தான்
உயர்தமிழை ரசிப்பதிலே முதன்மை யோனாய்ச்
சொல்லவரும் தமிழ்க்கடவுள் 'முருக' னானான்
தமிழ்க்காவ லன்எங்கள் முருகு வாழ்க!

'ஐயாவுக்கும் அம்மாவுக்கும் என்ன தகராறு?' என்று கிண்டினான் ஆறுமுகம்.

குருசாமி பதில் சொல்வதற்குள் காப்பியுடன் அங்கே வந்துசேர்ந்த சரோஜா "அதெல்லாம் ஒண்ணுமில்லே அண்ணா! பிள்ளைகள் கேலி பேசுதுகள்" என்று முந்திக்கொண்டு சொல்லிவைத்தாள்.

"அம்மா சொல்வது பொய்" என்று பாண்டியன் "குறுக்குச்சால்" ஓட்டினான்.

அப்புறமென்ன! சரோஜா குருசாமியை ஓரக்கண்ணால் பார்த்தாள். இருவர் முகத்திலும் குறுநகை தவழ்ந்தது. பாண்டியனை வாரித்தூக்கி முத்தமிட்டாள் சரோஜா. உடனே ஓடிப்போய் எல்லா விளக்குகளையும் போட்டான் செல்வம். எல்லோருடைய முகத்திலும் ஆனந்தம் சுடர்விட்டது.

ஃ ஃ ஃ

சின்னப்பயலின் கொள்ளைச் சமர்த்தை நினைத்துப் பெருமூச்சுவிட்டான் குருசாமி.

அவனைக் கண்டுபிடிக்காமல் வீட்டுக்குப் போக அவனுக்கு மனமில்லை. பிரமை பிடித்தவன்போல் ஊர்ந்துகொண்டிருந்தான். அதற்குள் அவன் தாயாரே அவனைத் தேடிக்கொண்டு வந்துவிட்டார்கள்.

'பாண்டியன் வந்துவிட்டான். கடைத் தெருவில் வழிதெரியாமல் தவித்தானாம். ஒரு ஐயா கூட்டிக்கொண்டுவந்துவிட்டார். வீட்டில் இருக்கிறான் வா" என்றார்கள் மீனாட்சியம்மாள்.

குருசாமிக்குப் போன உயிர் திரும்பிவந்த மாதிரி இருந்தது. தாயும் மகனும் வேகவேகமாக வீட்டுக்கு வந்தார்கள்.

சின்னப்பயலைத் தூக்கி அணைத்துக்கொண்டான் குருசாமி. அவன் கண்களில் நீர் துளித்தது.

வேறொரு பக்கம் பிள்ளையைத் தேடப் போயிருந்த சரோஜாவும் செல்வமும் அப்போது திரும்பிவந்தார்கள்.

அண்ணனைக்கண்டதும் அப்பாவின் அணைப்பிலிருந்து வேகவேகமாக இறங்கினான் பாண்டியன். "அண்ணா உனக்கு ஒண்ணு இந்தா" என்று ஒரு மிட்டாயைச் செல்வத்திடம் கொடுத்தான்.

"ஏதடா மிட்டாய்?" என்றான் குருசாமி. "அந்த ஐயா இரண்டு மிட்டாய் குடுத்தார். ஒண்ணு நான் தின்னேன். அண்ணனுக்கு ஒண்ணு கொண்டாந்தேன்" என்றான் சின்னப்பயல் மழலைச்சொல்லில்.

அண்ணனுக்கும் பங்கு கொடுத்து நியாயமாக நடந்துகொண்டதில் அவனுக்கு ஒரே மகிழ்ச்சி!

அவன் காணாமல் போனது, தேடியது, வந்தது எல்லாம் நொடியில் மறந்து போயிற்று. அந்தச் சின்ன உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் 'அன்பு' ஒன்றுதான் அனைவரின் உள்ளத்திலும் நின்றது.

[20-11-1955 தமிழ் முரசு ஞாயிறு பதிப்பில் வந்த சிறுகதை].

முருகு அல்லது பத்திரிகை

டாக்டர் இரா. தண்டாயுதம்
மலாயாப் பல்கலைக் கழகம்

அறிவியல் முன்னேற்றங்கள் நாளுக்குநாள் உலகைச் சுருக்கி வருவதை நாமெல்லாம் நன்கு அறிவோம். இந்தச் சுருக்கம், அரசியல் பொருளாதார சமுதாய நிலைகளில் எத்தனையோ பொதுப் பண்புகளை உருவாக்கிவிட்டது. நடையுடை பாவனைகள், பழக்கவழக்கங்கள், எண்ணப் போக்குகள், ஆட்சியமைப்புக்கள், தொழில் வளர்ச்சித் திட்டங்கள், பொருளாதார நிலைத்தன்மைக்கான வழிமுறைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், எல்லோரும் சமம் என்ற நம்பிக்கை, கல்வித்துறை நடைமுறைகள் முதலிய பல துறைகளில் இன்று உலகத்தின் ஒரு மூலையில் ஒரு தனிப்பட்ட மனிதரின் பல நாள் சிந்தனையில் முகிழ்க்கும் கருத்து, இருபத்துநான்கு மணி நேரத்தில் மனிதன் வாழும் இடங்களுக்கெல்லாம் சென்றுவிடுகிறது.

இவ்வாறு செல்லவும், இத்தகைய பொதுத்தன்மைகள் தோன்றி வளர்ந்து பரவி வேரூன்றி மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்தவும் கருவியாக அமைவது பத்திரிகை. அடுத்த வீட்டுச் செய்தியைக் கூடக் காலையில் பத்திரிகை மூலமே அறிய வேண்டும் என்ற அளவுக்கு வாழ்க்கையை அமைத்துக்கொண்ட நாம், ஒரு சிறிய கற்பனையைச் சிறிதளவு நேரமே செய்து பார்த்தால்போதும்; பத்திரிகையின் பயனை நாம் உடனே புரிந்துகொள்ளலாம். பத்திரிகையின் முகத்தில் விழித்தே நாளைத் தொடங்கும் இன்றைய பரபரப்பான உலகில் திடீரெனப் பத்து நாட்களுக்குப் பத்திரிகையே வரவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள் அந்த நிலையை நம்மால் நினைத்துப்பார்க்கமுடியுமா? அறிவியலால் உலகம் சுருங்கிவருவதை உணரும் நாம், பத்திரிகை இல்லாவிட்டால் திடீரென்று உலகம் அண்டைவீட்டுக்காரர்களால் கூடத் தொடர்பு கொள்ள முடியாத அளவிற்கு மிகமிக விரிந்துவிடுவதை உணர்வோம். அதனால்தான் 'பத்திரிகை உலகம்' என்றே இந்த உலகத்தை அறிஞர்கள் அழைக்கின்றார்கள். அரசியல் முதல் கலை, இலக்கியம், சமூகம், பொருளாதாரம் முதலிய அனைத்தும் இன்று பத்திரிகைகளைச் சார்ந்தே நிற்கின்றன. இதனை நன்குணர்ந்து பொறுப்புடன் பணியாற்றும் தமிழ்ப் பத்திரிகையாளராகிய முருகுவைத் தமிழ்ச் சமுதாயத்தினின்றும் பிரிக்கமுடியாது; உலகச் சமுதாயத்தினின்றும் பிரிக்க முடியாது. கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாகப் பத்திரிகையுடன் இரண்டறப் பிணைத்துக்கொண்ட வாழ்க்கை முருகுவின் வாழ்க்கை.


பத்திரிகை என்பது வெறும் பொழுது போக்கிற்காக ஏற்பட்டதல்ல; அதனை ஏற்படுத்தியவர்களும் சாதாரண மனிதர்களல்ல. அறியாமை நிறைந்த உலகில் விளக்குப்போலப் பத்திரிகை; இத்தகைய பத்திரிகை பிறந்த இடம் அறிஞர்கள் மனம். தமிழ்ப்பெரும் கவிஞரான பாரதிதாசன் இதனை ஒரு பாடலில் மிகச் சிறப்பாகப் புலப்படுத்தியுள்ளார்:

'காரிருள் அகத்தில் நல்ல
கதிரொளி நீதான்! இந்தப்
பாரிடைத் துயில்வோர் கண்ணிற்
பாய்ந்திடும் எழுச்சி நீதான்!
ஊரினை நாட்டை இந்த
உலகினை ஒன்று சேர்க்கப்
பேரறி வாளர் நெஞ்சிற்
பிறந்த பத்திரிகைப் பெண்ணே'!

அறிஞர்கள் மனத்துப் பிறந்த இப்பத்திரிகைப் பெண்ணை மலேசியத் தமிழ் உலகில்

போற்றி வளர்த்துவந்தவர் தமிழவேள் கோ.சா.; போற்றி வளர்த்துவருபவர் ஆசிரியர் முருகு.

ஆசிரியர் முருகுவின் எழுத்துப் பணியும் பத்திரிகைப் பணியும் 1939ஆம் ஆண்டே தொடங்கிவிட்டன. திருச்சியில் அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது துளிர்த்த இப்பத்திரிகை ஆர்வம் தொடர்ந்து பல இன்னல்களுக்கிடையிலும் வளர்ந்து வருவதை இன்றும் நாம் காணமுடிகிறது. பள்ளியில் படிக்கும்போதே ஆசிரியர் முருகு நடத்திய 'இளந்தமிழன்' என்ற திங்களிருமுறை கையெழுத்துப் பத்திரிகை அறிஞர் பலர் கவனத்தைக் கவர்ந்தது. நோபல் பரிசு பெற்ற அறிவியல் அறிஞரான சர். சி. வி. ராமனின் துணைவியார் திருமதி லோகசுந்தரி இவ்விதழில் எழுதியவர்களில் குறிப்பிடத்தக்கவர். இதற்குப் பின், பாரதியாரை மகாகவி எனத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்துவைத்த வ.ரா. அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய 'குமரன்' என்ற பத்திரிகையின் ஆசிரியராக முருகு அமர்ந்தார். சிறந்த தமிழறிஞராகவும் சீர்திருத்தச் செம்மலாகவும் விளங்கிய 'குமரன்' ஆசிரியர் சொ. முருகப்பா அவர்களிடம் முருகு பெற்ற அனுபவத்தை இன்றும் அவர் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறார். அவருடன், பிற்காலத்தில் தமிழவேள் கோ. சா. அவர்களிடம் பெற்ற அனுபவமும் ஆசிரியர் முருகுவின் வாழ்க்கையில் இரண்டு முக்கிய அத்தியாயங்கள் எனலாம். இவர்களுடன் தம்மைப் பண்படுத்திய வேறு மூவரையும் முருகு குறிப்பிட மறப்பதே இல்லை. "மற்றும் மூன்று பெரியார்களையும் நான் குறிப்பிட வேண்டும். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப் புலவர் அப்பாதுரை, கோநகர் புலவர் வித்வான் விசு. திருநாவுக்கரசு ஆகிய மூவரும் என்னுள்ளே தமிழுணர்வு, இலக்கிய ஆர்வம், எழுத்தாற்றல் ஆகியவை வளர்வதற்குப் பெருந்துணை புரிந்



திரு. முருகுவுக்கு 1965-ல் சென்னை எழுத்தாளர் சங்கம் குழந்தைக்கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா இல்லத்தில் அளித்த வரவேற்பில் திரு. கு. அழகிரிசாமி பேசுகிறார். திரு. ந. பிச்சமூர்த்தி, திரு. நாரண துரைக்கண்ணன், திரு. அகிலன், திரு. கண முத்தையா, திரு. பெரியண்ணன் முதலியவர்களையும் படத்தில் காணலாம்.

சிவகாமியின் செல்வர்கள்!

1965-ல் கர்மவீரர் காமராஜரை சென்னையில் அவரது இல்லத்தில் சந்தித்தபோது.

கர்மவீரர் காமராஜர் சிவகாமியின் புதல்வராவார். முத்தமிழ்வித்தகர் முருகுவும் சிவகாமியின் புதல்வராவார்.



தனர் என்பதே இங்கு நன்றியுடன் குறிப்பிடுகிறேன்'' என்று முருகுவே அவர்களைக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுள், பாரதிதாசனிடம் முருகு கொண்டுள்ள ஈடுபாடு மிகப் பெரிது. முருகு அவர்களுள் முழுமையாக நிறைந்திருக்கும் தமிழுணர்விற்கு வித்திட்டவர் பாரதிதாசன். 'தமிழை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்; எமை நத்துவாயென எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்' என்ற பாரதிதாசன் கருத்தை வேதவாக்காகக் கொண்டவர் முருகு. அதன் விளைவாக உருவாகித் தோன்றி வளர்ந்து வரும் தமிழ்ப்பள்ளி மாணவர் கல்வி நிதியை அனைவரும் அறிவர். பாரதிதாசன் தொடர்பு, அவருடைய வாழ்க்கையில் இரு முக்கிய மாறுதல்களைச் செய்துவிட்டது.

முதலாவது: இலக்கியத் துறைகளில் கவிதையில் அவருக்கு அளவற்ற ஈடுபாடு இருப்பினும், அதை வளர்த்துக்கொள்ளாமலேயே விட்டுவிட்டார். அதற்கான காரணத்தை முருகுவே இப்படிக் கூறுகிறார்: கவிதையே எனக்கு மிகவும் பிடித்த இலக்கிய வடிவம். ஆரம்பத்தில் எழுத்துத் துறையில் அடியெடுத்து வைத்த நேரத்தில் கவிதைகளையும் நான் எழுதியதுண்டு. பாரதிதாசனையும், பாரதியாரையும் ஈடுபட்டுப் படிக்கத் தொடங்கிய பிறகு என்னுடைய கவிதை ஆக்கத்தில் எனக்குள்ள நம்பிக்கை குறைந்து நான் கவிதை எழுதுவதை நிறுத்திக்கொண்டுவிட்டேன்.'' இது தமிழுக்கேற்பட்ட இழப்பு. இரண்டாவது: உணவுத் துறையில் சைவராக இருந்த முருகுவை அசைவராக மாற்றியது பாரதிதாசன்தான். இது சைவ உலகிற்கு ஏற்பட்ட இழப்பு. இன்றைக்கு முப்பத்தோரு ஆண்டுகளுக்கு முன்—1945-ல் ஆசிரியர் முருகு அவர்களின் திருமணத்திற்குப் பாவேந்தர் அளித்த வாழ்த்துப்பா, முருகுவிடம் அவர் கொண்டிருந்த அன்பைத் தெள்ளத் தெளிய உணர்த்துகிறது.

'குமரனு'க்குப் பிறகு ஆசிரியர் நடத்திய 'பொன்னி' என்ற இலக்கிய இதழ், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு காவியம். 1947-ம் ஆண்டு பொங்கலன்று முதல் முதலாக வெளிவந்த 'பொன்னி' பல எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் தமிழுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தது. 'பாரதிதாசன் பரம்பரை' என்ற பெயரில் 'பொன்னி' அறிமுகப்படுத்திய கவிஞர்கள் பலர் பின்னர் பெரும் புகழ் பெற்றனர். இன்றைக்குக் கால் நூற்றாண்டுக்கு முன் 'பொன்னி' பாரதிதாசனுக்காக ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது. அதில் திரு. வி. க.

கண்ணாடி

-(முருகு)-

1.	மூக்கி	லணிவதுங்	கண்ணாடி
	முகத்தைப்	பார்க்கவுங்	கண்ணாடி
2.	காப்பி	குடிக்கவுங்	கண்ணாடி
	கடியாரத்	துள்ளதுங்	கண்ணாடி
3.	படத்தை	மறைக்கவுங்	கண்ணாடி
	பாங்காய்ச்	சிவவும்	கண்ணாடி
4.	நிலையில்	வைக்கவுங்	கண்ணாடி
	நெடுகப்	பதிக்கவுங்	கண்ணாடி
5.	விளக்கைச்	சுற்றியுங்	கண்ணாடி
	வீட்டுச்	சுவற்றிலுங்	கண்ணாடி
6.	சாளரம்	அமைக்கவுங்	கண்ணாடி
	தள்ளுங்	கதவிலும்	கண்ணாடி
7.	மேசை	விரிப்புங்	கண்ணாடி
	மெதுவாய்	வைப்பதுங்	கண்ணாடி
8.	ஊடே	பார்க்கவுங்	கண்ணாடி
	உடைந்து	போவதுங்	கண்ணாடி
9.	மண்ணை	லானதுங்	கண்ணாடி
	மதிக்கப்	படுவதுங்	கண்ணாடி
10.	எங்கே	பார்த்தாலுங்	கண்ணாடி
	எண்ணில்,	உலகமே	கண்ணாடி

(1-12-1942-ல் 'இளந்தமிழ்'னில் வந்த கவிதை)

பாரதிதாசனைப் பற்றிக் கூறும் ஒரு கருத்து பாரதிதாசனை ஒரு புதிய கோணத்தில் காட்டுகிறதெனலாம். 'தம்முடைய மறதியினாலோ அல்லது வயதின் காரணமாகவோதான் விழாவெடுக்கவும், சிறப்பு மலர் வெளியிடவும் பாரதிதாசன் ஒப்புக்கொண்டிருக்கிறார்' என்று அம்மலருக்குத் தந்த சிறப்புச் செய்தியில் அறிவியல் அறிஞர் ஜி. டி. நாயுடு குறிப்பிட்டுள்ளார். இச்சிறப்பில் பாதி முருகுவைச் சாரும்.

மலேசியத் தமிழ்ப் பத்திரிகை உலகம் ஒரு விநோதமான உலகம். இலக்கியத்திற்கெனத் தனியாகப் பத்திரிகைகள் வராத சூழலில் இலக்கியத்தை வளர்க்கும் கடப்பாடும் இவற்றிற்கு உண்டு. இதனை நன்குணர்ந்து 'நேசனி'ன் ஞாயிறு பதிப்புகளை இலக்கிய வளர்ச்சிக்கு ஒதுக்கி முருகு ஆற்றும்பணி, அருமையும் பெருமையும் கொண்டது. கவிதைகளுக்கும் கதைகளுக்கும் பவுன் பரிசு வழங்கும் திட்டம், பல்துறை அறிஞர்களையும் வாசகர்களுடன் தொடர்புகொள்ள வைக்கும் திட்டம்; வளரும் எழுத்தாளர் பக்கம் முதலிய பல பகுதிகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

'ஆசிரியர்—நாட்குறிப்பு' என்று அண்மையில் அவர் தொடங்கியுள்ள பகுதி, பத்திரிகை ஆசிரியர்கள் எதிர் நோக்கும் சிக்கல்களையெல்லாம் உணர்த்தி, வாசகர்க்கும் பத்திரிகைக்கும் இடையில் ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தும ஒரு சிறப்பான பகுதி. இவ்வாறு நாளும் பத்திரிகை உலகுடனேயே தம் வளர்ச்சியையும் வாழ்வையும் பிணைத்துக் கொண்டிருக்கும் முருகுவை 'முருகு அல்லது பத்திரிகை' என்று கூறுவது முற்றும் பொருந்தும்.

வாழ்க முருகு!

வளர்க முருகுவின் பணிகள்!!

முருகெனும் செம்மல் வாழ்க !

(ரெ. சண்முகம்)

பிறவியெடுத்த மனிதரெல்லாரும்
பெருமைக்குரியவர் இல்லை—அப்
பெருமையைத் தேடிப் பெற்றவர் இருந்தால்
அவரில் பெரியவர் இல்லை.
கருவில் உதித்த கணமே தமிழைக்
காப்பேன் எனுமோர் நினைவாய்—வந்த
முருகெனும் அண்ணலின் பெருமையைப் பேச
முந்திடும் வாயே திருவாய்

2

முருகன் என்பார் கருணை என்பார்
முழுதும் அவனருள் என்பார்—அந்த
திருவே தமிழைத் தந்தது என்று
திருப்புகழ் பாடிப் பணிவார்
உருவாய்த் தமிழ்க்குப் பணிசெய அழைத்தால்
உதவா மொழியென உரைப்பார்!—நடுவில்
திருவாய் அமைந்த எம்முடைத் தலைவன்
ஏந்தல் முருகே வாழ்க

3

நினைவும் எழுத்தும் செயலும் பிறவும்
நெஞ்சில் இனிக்கும் தமிழாம்—பெரும்
பணிவும் அடக்கமும் கொண்டான் உள்ளத்தில்
படர்ந்த தனைத்தும் தமிழாம்
துணிவொடு வீரம் துலக்கும்—எந்தன்
தூய்தமிழ்க் கோரிடர் வந்தால்—ஓ
ரிணையே இல்லா முத்தமிழ்ச் செல்வன்
முருகெனும் செம்மல் வாழ்க

4

இன்றுள சிறந்த கவிஞர்கள் பலரும்
இன் தமிழ் 'பொன்னி'யின் மரபாம் —பல
கன்றினை ஈந்தே மகிழ்ந்திடும் பசுபோல்
கனியும் மனமே முருகாம்
இன்றும் நாளையும் என்றும் அவரோர்
இனிக்கும் செந்தமிழ்ப் பழமாம்—குணக்
குன்றினில் நிலைத்த நற்றமிழ்த் தலைவனின்
குண நலம் ஏற்றுப் புகழ்வோம்

5

எத்தனை வளத்தில் வாழ்ந்திருந்தாலும்
இன்றமிழர் மொழியே தமிழாம்—இதை
சித்தமதில் நிலைநிறுத்தி வாழ்ந்திடும்
செம்மலின் மனமே மனமாம்
உத்தமச் சான்றோன் உயர்தமிழ் தலைவன்
ஊழியும் ஊழியும் வாழ்க—தமிழ்ச்
சத்தியம் வாழ நிலைத்திட வேண்டும்
ஞாலம் வேண்டுதல் இதுவே

நியாயக்குரல்

கு.சா. பெருமாள்

முருகு என்றால் தமிழ் என்று பொருள்!
முருகு என்றால் அழகு என்று பொருள்!
முருகு என்றால் இனிமை என்று பொருள்!
முருகு என்றால் உரிமை என்று பொருள்!
முருகு என்றால் எளிமை என்று பொருள்!
முருகு என்றால் கனிவு என்று பொருள்!
முருகு என்றால் பரிவு என்று பொருள்!
முருகு என்றால் அடக்கம் என்று பொருள்!

எல்லாவற்றுக்கும் மேலாக இந்நாட்டைப் பொருத்தவரை 'முருகு' என்ற முத்தமிழுக்கு உரிமை, துணிவு, சுயமரியாதை, திரம், வீரம் தூண்டுகோல், வழிகாட்டி, காவலர், தானைத் தலைவர், சமுதாய உணர்வு, சமுதாய முதுகெலும்பு, தமிழர் தலைவர், அண்ணா, ஆசிரியர், ஆலோசகர், முத்தமிழும் அறிந்த பெரும் மேதை என்றும்கூட பொருள்.

இத்தகைய உயரிய சிறப்புக்குரிய பெருமகனுடன் சமூகத்துக்குள்ள தொடர்பு பற்றி சிந்திக்கும்போது கால் நூற்றாண்டு இந்தியர் தம் வரலாற்று வரிகள் நிழல் படங்களாக நம்முடன் வந்து—வந்து மோதுகின்றன.

எத்தனை—எத்தனையோ வரலாற்றுப் படிகளில் முத்தமிழாரின் முத்திரைகள்—தலையங்கப் பகுதியின் கைச்சாத்துகள் — வீரம் சொரிந்த எழுத்துப் படிகள், எத்தனை...... எத்தனையோ......!

முருகு முழுங்காத எந்தப் பிரிவும் சமுதாயத்தில் இல்லை எனலாம். தமிழ் உணர்ச்சி—தமிழன் உரிமை, சமுதாயப் பங்கீடு, மொழிப் பாதுகாப்புக் குரல்—கலாச்சாரம், சமயம், மேம்பாடு எல்லாம் அவரது இதய தாகங்களாகும்.

அதே சமயம் நாட்டுக்கு நன்மைகளைச் சேர்த்தல் — தேசிய உணர்வு — கம்யூனிச எதிர்ப்பு — கிழறுப்பு முறியடிப்பு எல்லாவற்றிலும் அவரது பணிகள் அயர்வின்றி இடம் பெற்றுள்ளன.

நெஞ்சில் கைவைத்துப் பார்க்கும் இதயமுள்ள பொதுத் தொண்டன், அரசியல் தலைவன், இந்திய அமைச்சர்கள், மாண்புமிகுகள் அனைவருமே முருகுவின் சுயநலமற்ற நன்றியைப் பெற்றவர்களே. அது குறித்து இங்கே கேள்விக் குறியே இருக்க முடியாது.

சமுதாய—அரசியல் இயக்கங்களுக்கு—பொதுத் தொண்டனுக்கு எங்கெல்லாம் அநீதி இழைக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் முருகுவின் இதயம் எல்லாவகையிலும் பாரபட்சமின்றி நீதிக்குக் குரல் கொடுக்கும்.

நாட்டின் பெரிய அமைப்புகளான ம.இ.கா., தே.தோ. தொழிலாளர் சங்கம், தேசிய நில நிதிக் கூட்டுறவுச் சங்கம், ம.தி.க. தமிழ் இளைஞர் மணிமன்றப் பேரவை இன்னும் இருக்கின்ற முக்கிய அமைப்புகள் அனைத்துமே முருகுவின் நன்னோக்கத்தை எருவாகக் கொண்டு வளர்ந்த ஆலவிருட்சங்களாகும்.

சமுதாய உரிமைக்கும்—நீதிக்கும் போராடும் முருகுவின் பேனாவின் எழுத்துக் கூர்மையால் அபிப்பிராயப் பேதங்கள் பல தோன்றித் தோன்றி பூகம்பமாக சர்ச்சைகளை—மனக் கசப்பை ஏற்படுத்தி மறைந்தாலும் அவரது நன்னோக்கம் எல்லோருமே ஏற்றுக்கொள்ளத் தக்கது என்பதை நாடெங்கும் நடைபெறும் பொன்விழா நிகழ்ச்சிகளே உறுதிப்படுத்துகின்றன.

உலகமே அதிர்ச்சிக்குள்ளாகும் ஒரு மாபெரும் சம்பவம் அமெரிக்காவில் நடைபெற்றிருந்தாலும்; எங்காவது ஒரு மூலையில் ஒரு தமிழனுக்கு இழுக்கென்றால்—அவன் பேசும் தமிழுக்கு தலைகுனிவு என்றால்—முருகுவின் எழுதுகோல் தமிழனுக்கும்—தமிழுக்குமே முதற் வாய்ப்பினை வழங்கும் உரிமைக்கு வித்திடும். அத்தகைய சமுதாய மொழி உணர்வு முருகுவின் உதிரத்தோடு ஊறி துடிப்போடு ஓடிக்கொண்டிருக்கிறது.

சகோதரர் முருகுவோடு எனக்கு ஏற்பட்ட உறவு தமிழால் ஏற்பட்டதாகும். அது தலைநகரில் ஏற்பட்ட மாபெரும் வெள்ளத்தோடு இரண்டறக் கலந்ததாகும்.

ஆம்! வெள்ளம் ஏற்பட்டபோது நானும் அவரும் ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டு ஒன்றாக இணைந்து உண்ணும் வாய்ப்பும் பெற்றோம். இன்பத்திலும் துன்பத்திலும் இணைந்திருக்கும் பேறு இறைவன் கிழித்த அழுத்தமான கோடுகளல்லவா?

அன்றுதொட்டு எங்களிடையே சகோதரப் பிணைப்பு வேரூன்றிவிட்டது. இடையில் ஏற்பட்ட எத்தனையோ கருத்து மாற்றங்கள் எங்களை ஒன்றும் செய்யவில்லை. அவற்றை ஒரு தொலைபேசி உரையாடலில் மூலையிலேயே கிள்ளி எரிந்துள்ளோம்.

நான் கடந்த காலங்களில் நடத்திய எனது சொந்த போராட்டங்களின்போதும், அவர் நடத்தும் சமுதாயப் போராட்டங்களின் போதும் எங்கள் இருவரது உறவும்ஒத்துழைப்பும் பரஸ்பரமாகவே இருந்துவந்துள்ளது. நரிக் குணங்களின் திருப் பணிகள் அங்கே வெற்றி பெறவில்லை.

ஒருமுறை எழுத்தாளர் சங்கத்தில் அவர் தலைவராகவும் நான் செயலாளராகவும் இருந்து பணிபுரியும் வாய்ப்பு ஏற்பட்டது. அதேபோல் அறிஞர் அண்ணா மறைவு குறித்து அனுதாபக் கூட்ட ஏற்பாட்டிலும் இருவரும் அதே பொறுப்பு களிலிருந்தோம்.

இச்சேவைகளில் எங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளும் கருத்து வேறுபாடுகளும் பல. இருந்தாலும் அவரது 'அடக்கம்' எனது ஆவேசத்தை அவ்வப்போது அவரது பெருந்தன்மையான அறிவுரை மூலம் வெற்றி கொண்டுள்ளது. என்ன இருந்தாலும் அவர் மேதையாகவே விளங்கினார்.

1969ல் டாக்டர் இராம சுப்பையாவின் தமிழ்ப்பள்ளி புனரமைப்புக் கொள்கையை இருவருமே எதிர்த்தோம். அதன் பலன் டாக்டரோடு மன வேறுபாடு. அதனால் தொழிலில் எனக்குத் தொல்லை துவங்கியது. நான் டாக்டர் மீது நெருப்பாகிவிட்டேன்... ஒரு நாள் டாக்டர் திடீரென நம்மை ஏமாற்றிவிட்டுப் போய்விட்டார். அன்று தொலைபேசியில் அழைத்த முருகு அவர்கள் நாம் இருவரும் டாக்டரின் அடக்கத்துக்கு இணைந்தேபோக வேண்டும். அனுதாபக் கூட்டமும் நடத்த வேண்டுமென்றார்.. நான் தயக்கமின்றி ஒப்புக்கொண்டேன் அன்று முருகு அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் நடந்துவிட்ட சம்பவங்களுக்கு சமாதானம் சொன்னார் மிக லாவகமாக.. [அதேபோன்று மலேசிய வானொலியின் இந்தியப்பகுதித் தலைவர் திரு. இரா. பாலகிருஷ்ணனுடன் ஏற்பட்ட தகராறையும் முருகுவே தீர்த்துவைத்தார்.] .எல்லாம் முடிந்து விட்டுக்கு வந்த நான் முருகுவின் பெருந்தன்மையை நினைத்து வியந்ததோடு அனுதாபக் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்தேன்.

நான் எழுதத் துவங்கி எத்தனையோ எழுத்துப்படிகளை முருகுவுக்கு அனுப்பியுள்ளேன். அவர் பிரசுரிக்க விரும்பாமல் குப்பையில் போட்ட எந்தப்படி குறித்தும் எப்பொழுதும் கேள்வி எழுப்பியதோ—பிரசுரிக்க பேரம் பேசியதோ இல்லை. அவர் ஆசிரியர் மட்டுமல்ல—சமூகக் காவலர்—நன்மையும் தீமையும் அவர் அறிந்ததே என விட்டுவிடுவேன், பிரசுரிக்காத எழுத்துப் படிகளைப் பற்றி இருவருமே மௌனம் சாதிப்போம். எப்பொழுது பார்த்தாலும்



பேரறிஞர் அண்ணாவும் திரு. இரா. செழியனும் மலேசியா வந்திருந்தபோது கோலாலம்பூர் மெர்தேகா அரங்கத்தில் அவர்களுக்கு அளித்த வரவேற்பு.

நீங்கள் பிரச்னைகளைப் புரிந்தவர், நிறைய எழுதுங்கள். அதேபோல் உங்களைப் பொருளியலில் பலப்படுத்துங்கள் தியாகியாகி ரோட்டுக்கு வந்துவிடாதீர்கள் என ஆலோசனை கூறுவார்.

எந்தக்காலத்திலும் நியாயமற்ற பிறரது நெருக்குதலுக்கு அடிபணியாது சுதந்தரமாகக் கருத்துக்களைப் படைத்து—பேசி வரும் முருகு அவர்கள் தீட்டிய தலையங்கங்கள் பெரும்பாலும் அனைத்தையும் நான் தவறாது படிப்பதுண்டு. அவற்றில் இறுதிப் பகுதிகள் மிக முக்கியமானவை. அங்கேதான் அந்த முழு தலையங்கத்தின் உயிரும் உள்ளக்கிடக்கையும் அடங்கிக்கிடக்கும், சமுதாய உணர்வும் உரிமையும்—நியாயக் குரலும் அங்கே நிழல் படம்போல் பேசும்.

அறிஞர் அண்ணா, பிரதமர் துன் அப்துல் ரசாக், டான்ஸ்ரீ டத்தோ ஆதிநாகப்பன் ஆகியோரின் மறைவின் போதும் தமிழகத் தமிழன் அரசு கவிழ்க்கப்பட்டபோதும் அரசியல் வாதிகளின் தாக்குதலுக்கு எதிரடி கொடுக்கும் போதும் சமுதாய உரிமைக்கு குரல் கொடுக்கும் ஒவ்வொரு முறையும் "முருகு" என்றால் தன்மானத் தமிழன்—தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பாசறைக்குண்டு. நிதானம்—சகிப்புணர்ச்சி, ஆகியவற்றோடும் 'காரம்' இடைக் குத்தும் எழுதுகோலை அவர்தமது கரங்களில் ஏந்தியுள்ளார் என்பதை நாம் அறிய முடியும். அவ்வப்போது காந்திய வாடையும் இழையோடும்.

சமுதாய வாழ்வில் உயிரையே வைத்துள்ள முருகுவின் நோக்கில் எப்போதும் சுய நலம் மேலோங்கியிருந்ததே இல்லை எனலாம்.

இன்று அரசியலாரிடமிருந்து அவர் பெற்றுள்ள விருதுகள் அவரைத் தேடி வந்தவை. அவர் சமூகத்தில் பெற்று வரும் பேறும் புகழும் அவரது உழைப்பாலும் அவரிடம் குடிகொண்டிருக்கும் நல்லெண்ணத்தாலும் — சமுதாயம் வாழ வேண்டும் என்ற லட்சிய உணர்வாலும் புரிந்துணர்வாலும் பெறப்பட்டவை.

தமிழகத்து இராம. அரங்கண்ணல் இங்கு வந்திருந்தபோது; நீங்கள் தமிழகத்திலேயே தங்கியிருந்தால் இன்று ஒரு மந்திரியாகியிருப்பீர்கள்;அல்லது பல லட்சங்களுக்கு அதிபதியாகியிருக்கலாம்; நீங்கள் இருக்க வேண்டிய இடத்தில் யார் ...யாரோ...... என "முருகு"விடம் குறிப்பிட்டார். அப்போது நானும் உடனிருந்தேன் எனக்கு ஒரே ஆச்சரியம்!

பத்திரிகைத் துறை நிர்வாகத்தில் நானும் பல பழம் புலிகளிடம் வேலை பார்த்துள்ளேன்; ஆனால் முருகுவின் நிர்வாகத்திறன், செய்திகளைப் பிரசுரிக்கும் முறை, செய்திகளைத் தேர்வு செய்யும் சாதுர்யம் அவருக்குரிய தனிக்கலையாகும்.

இன்று தமிழ் நேசன் மலேசியாவில் மட்டுமின்றி உலகின் தமிழறிந்தோர் இல்லமெல்லாம் ஒரு நினைவாக விளங்குவதற்கு முருகு அண்ணாவின் அறிவாற்றல்—தமிழாற்றல்—நிர்வாகத் திறன்—சக ஊழியர்களிடம் அவர் கொண்டுள்ள பற்று-பாசம் அவர்கள் முருகு மீது கொண்டுள்ள பணிவு—மரியாதை—நம்பிக்கை ஆகியவையோடு சமுதாயம் முருகு மீது கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையும் காரணமாகும்.

முருகுவின் எல்லாப் பணிகளுக்கும் சிகரம் போன்றது அவர் துவக்கிய 'தமிழ்ப் பள்ளி மாணவர் கல்வி நிதியாகும்' இந்நிதி துவக்கி அவர் அடைந்த இன்னல்களை சமுதாயம் அறியும்.

ஆனால் கால ஓட்டம் அந்நிதிக்கு எல்லா வகையிலும் ஆதரவையும்—எதிர்த்தோரின் இன்முக ஆதரவையும்கூட பெருமனதுடன் வழங்கியிருக்கிறது. தமிழ் நேசன், தமிழ்ப் பள்ளிகள், முருகுவின் வரலாற்றின் முக்கியப் பகுதிகளாக இக்கல்வி நிதி நிச்சயம் விளங்க முடியும்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக
அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"
என்பதை முருகுவின் இத்தமிழ்ப் பணி என்றும் !வரலாற்றுக் காலம் தொட்டு போற்றிவரும்.



இரண்டு தாயர்!

ஞாலத்து இருநாள் நற்றுணை நல்குவாய்
ஞாயிறு கேண்மின் ஞாயிறு கேண்மின்
தாயிருந்து பரிவு தரப்பெறும் சேய்அன்ன
நெஞ்சம் நின்னுரு நேர்ந்தனம் நிலத்தே
ஒருதாய் மணிவயிறு ஏந்தினள்
மறுதாய் "முருகு" வடிவுநின் இணையே



வள்ளல்

திரு. அ. சிதம்பரனர் அவர்களின்

வாழ்த்து!

தமிழ்க் காவலர் முருகுவின் பொன் விழாவை முன்னிட்டு வெளியிடப்பெறும் 'சிறப்பு மல'ருக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்தைத் தெரியப்படுத்துவதில் பெரு மகிழ்வு கொள்கின்றேன்.

இந்நாட்டில் தமிழ் மொழி ஏற்றம் பெறுவதற்கு அமரர் தமிழவேள் கோ சா. விற்குப் பிறகு தமிழ்க் காவலர் முருகுவின் பணி சிறந்து வந்திருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை.

அரசியல், சமூகம், கலை, கலாச்சாரம், பொருளாதாரம் ஆகிய எல்லா துறைகளிலும் இந்நாட்டு இந்திய சமுதாயத்தை சிந்திக்கச் செய்யும் வகையில் திருப்பு முனையாக இருந்து வந்திருக்கிருர். ஒரு செய்தி நாளேட்டு ஆசிரியராக மட்டுமல்லாமல் ஒரு சமுதாயத் தலைவராகவும் இருந்து கட்டுக்கோப்போடு வழிநடத்தி வந்திருக்கிருர் என்பதை நினைவு கூர்ந்து பார்க்கும் இவ்வேளையில் பொன் விழா மிகப் பொருத்தமாகவே அமைகிறது.

இவ்விழாவை பல சிரமங்களுக்கிடையில் நடத்தும் ஏற்பாட்டுக் குழுவினர்களுக்கு நன்றியைத் தெரியப்படுத்தும் வேளையில் தமிழ் தந்தை முருகு எல்லா நலமும் பெற்று மணி விழா காண வாழ்த்துகிறேன்.

அன்பன்,

அ. சிதம்பரம்

புகழ்த் தடயம்!

(கரு. வேலுச்சாமி)

பொன்னுருக்கிச் செய்தநெஞ்சம்
பூவிரித்த மஞ்சமென்று
புகழெடுத்து மலையமண்ணில் ஊன்றினுர்!
—குறள்
முன்னெறிக்கும் காவலராய்
மொழியுரைக்கும் நாவலராய்
முத்தமிழ்க்கும் வித்தகராய் தோன்றினுர்!
—இவண்
மன்னவர்க்கு நன்மதிப்பும்
மக்களுக்குப் பொன்மதிப்பும்
வாய்ந்தகுண சீலராய் விளங்கினுர்!
—கடைக்
கண்முருகன் காட்டியகா
ருண்யமென்று முருகுசுப்ர
மண்யம்மா மலேசியந் துலங்கினுர்!

ஃ ஃ ஃ

படையெடுத்த இளையவர்க்குப்
பணிகொடுத்த தளபதியாய்
பக்குவமாய் நெஞ்சிலூக்கம் ஊட்டினுர்!
—அவர்
நடையெடுத்த வழியிலெல்லாம்
நல்லதை உணர்த்திமொழி,
நாடு,சமு தாயஎழில் கூட்டினுர்!
—நாம்
அடையவந்த பெருமைஇவர்
அர்த்தமான எழுத்திலென்று
அழுத்தமான தமிழெழுதிக் காட்டினுர்!
—புகழ்த்
தடயமாகி இனவழிக்குத்
தலைமையாகி நீடுயிர்க்கும்
தர்மமாகி வாழுகின்ற பேற்றினுர்!



முருகுவின் தலையாயபணி!

தமிழ் உலகமும்—தமிழர் சமுதாய மும் மறக்கமுடியாத திரு. முகம்மது பாச்சாவின் இலட்சியமாக அவரது பெரிய உள்ளம் வழங்கிய நன்கொடை 500 வெள்ளியுடன் துவங்கிய 'தமிழ்ப்பள்ளி மாணவர் உதவி நிதி' சமுதாயத்தின் ஏக அங்கீகாரத்தைப் பெற்று தமிழ் நேசன், முருகுவின் கடும் உழைப்பால் சீரும் சிறப் பும் பெற்று வளர்ந்து வருகிறது.

இந்நிதி வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக் கும் முருகுவின் தலையங்கக் கருத்துகளும் நாடெங்கும் அவர் ஆற்றிவரும் கருத் தாழம் நிறைந்த சொற்பொழிவுகளும் பெரும் துணை புரிந்துள்ளன.

ஒவ்வொரு நாளும் இந்நிதி வளர்ச் சிக்காக அவர் வெளியிடும் கருத்துகளும் —ஆலோசனைகளும், முருகு அது குறித்து எவ்வளவு அக்கறையோடு சிந்திக்கின்ருர் என்பதைப் புலப்படுத்துகிறது.

50-ம் ஆண்டு பொன்விழாவில் பொன்னடி எடுத்து வைக்கும் முருகு அவர் களின் தமிழ் வரலாற்றில், அவரது தமிழ்ப் பள்ளி பணி என்றும் சுடர் விட்டுக் கொண்டேயிருப்பதுடன் அன்னவருக்கு மேலும் பல பொன்விழாக்களைக் கொண்டு வரும் என்பதில் சந்தேகமில்லை.

டி. பி. விஜேந்திரன்
தமிழ்ப் பள்ளி மாணவர் நிதி
செயலாளர்.

அமுதைப் படைக்கும் ஆசான்!



என். ஜி. இராஜரத்தினம்
*[முன்னுள் தலைமையாசிரியர்,
தேசிய மாதிரி ஆரம்பத் தமிழ்ப் பள்ளி,
பங்சார் சாலை, கோலாலம்பூர்.]*

திருவளர் செம்மல் பெருவள நாடன்
அருள்வள முத்தமிழ் வித்தகர் முருகெனச்
செப்பிடும் பாங்கினில் செயலாற் காட்டும்
சுப்பிர மணியனே வாழிய வாழ்க!
பொன்னி மதியுலாப் பொன்னே டதற்கு
முன்னுள் ஆசான் மூதறி வாளன்
சிங்கைமா நகரினில் சின்னுட் டங்கியே
தங்க மனத்தினன் தமிழவே ளுடனே
தமிழைக் காத்திடும் தரத்தில் நின்று
தமிழே தமிழர்தம் உயிரென் றேதுவை!
தமிழின் தினத்தாள் தமிழ்நே சன்வழி
அமுதைப் படைக்கும் ஆசான் ஆனபின்
கரும்புங் கைக்குமோ? கனிதமி ழேட்டினை
விரும்பார் உளரோ? விழிமின்! விழிமின்!
எழுமின் என்றுமே ஈண்டுள தமிழர்
விழுமங் களைந்திட வினைசெயும் இவர்க்கு
அரசும் போற்றிட அடைந்த சீர்மை
முரசங் கொட்டியே முழக்குமாப் போல
முருகு சுப்பிர மணியனுக் கின்னுள்
முருகு பொன்விழா முகிழ்ப்பதும் நெறியே!

முருகு வாழ்க்கைக் குறிப்பு

தொகுப்பு: பரிதாமணாளன்

முருகப்பன் - சிவகாமி ஆச்சி தம்பதியரின் புதல்வராக 5.10.1924ல் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்கள் பிறந்தார். பெற்றோருக்கு இவர் ஒரே பிள்ளை. சொந்த ஊர் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோனாபட்டு என்பதாகும். திரு. முருகுவுக்கு ஒன்றரை வயதாக இருக்கும்போதே இவரின் தந்தை முருகப்பன் இறந்துவிட்டார்.

1945ல் திரு. முருகுவுக்கும் வள்ளியம்மைக்கும் திருமணம் நடந்தது.

இவர்களுக்குச் செல்வம், பாண்டியன், கலைமணி, பொன்னி, சுப்பையா ஆகிய குழந்தைகள்.

செல்வம், பாண்டியன், பொன்னி ஆகியோருக்குத் திருமணம் ஆகிவிட்டது.

கலைமணி பல் மருத்துவம் படித்து வருகிறார். கடைசிப்பையன் சுப்பையாவுக்கு எட்டு வயதாகிறது.

மூத்த மகன் செல்வத்திற்கு இரண்டு குழந்தைகள்-தாமரை, முல்லை. செல்வம் மலேசிய வானொலி தமிழ்ச்செய்திப் பிரிவு மேற்பார்வையாளராகப் பணிபுரிகிறார்.

பாண்டியன் மலேசிய வானொலி செய்திப் பிரிவில் நிருபராகப் பணியாற்றி வருகிறார்.

பொன்னிக்கு ஒரு குழந்தை-விஷ்ணு.

எழுத்துலகம்

ஆசிரியர் முருகுவின் எழுத்துலகம் சுமார் 40 ஆண்டுகளுக்குமுன் துவங்கியது என்று சொல்லலாம்.

திருச்சி அர்ச். சூசையப்பர் உயர்நிலைப்பள்ளியில் 1939ஆம் ஆண்டு ஐந்தாம் படிவத்தில் படித்துக்கொண்டிருந்தபோது

முத்தமிழ்வித்தகர் முருகு சுப்பிரமணியன் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு எனக்குத் தெரிந்த சில விவரங்களை வைத்து மட்டுமே இங்கு தரப்பட்டிருக்கிறது.

திரு. முருகுவின் கட்டுரை ஒன்றை தமிழாசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வகுப்பில் படித்துக்காட்டி 'கட்டுரை என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும்' என்று அழுத்தமாகச் சொன்னார்.

'உனக்கு நன்றாக எழுத வருகிறது. நிறைய எழுது' என்று தமிழாசானின் நல் வாழ்த்தும் கிடைத்தது.

1942ல் படிப்பு, முதல் பல்கலைக்கழக வகுப்போடு முடிந்தது. படிப்பு முடியு முன்னர் திருச்சியிலேயே 'இளந்தமிழன்' என்னும் திங்களிருமுறை ஏட்டைத் துவக்கினார்.

கையினாலேயே எழுதப்பட்ட இந்த ஏடு ஒவ்வொரு தடவையும் பத்து, பதினைந்து பிரதிகள் வெளிவரும்;

'இளந்தமிழன்' ஏட்டில் புகழ்பெற்ற விஞ்ஞானி சர் சி. வி. ராமனின் துணைவியார் திருமதி லோகசுந்தரி ராமன் முதலான பல பெரியவர்கள் எழுதியிருக்கிறார்கள்.

'இளந்தமிழன்' அச்சுத்தேர் ஏறித் தமிழுலகில் வலம் வரவேண்டும் என்று கரந்தை தமிச்சங்க ஏடான 'தமிழ்ப் பொழில்' தன் மதிப்புரையில் வாழ்த்திற்று. ஆனால் அச்சுத்தேர் ஏறாமல் மூன்றாண்டுகளுக்குப்பின் 'இளந்தமிழன்' நின்று போனது.



குடும்பப்படம்

அமர்ந்திருப்பவர்கள்:
(இ. - வ.)

அன்னையார்
சிவகாமி ஆச்சி,
செல்வன் சுப்பையா,
திரு. முருகு
சுப்பிரமணியன்,
திருமதி வள்ளியம்மை.

நிற்பவர்கள்: (இ. - வ.)

திரு. பாண்டியன்,
திருமதி பொன்னி,
திரு. செல்வம்,
திரு. கலைமணி.

இளந்தமிழனில் முருகு என்னும் புனை பெயரில் எழுதி வந்ததோடு, இளந் தமிழன் ஆசிரியர்: முருகு என்னும் பெயரிலேயே வந்தது. அதுவே பிறகு பெயருக்கு முன்னுள் சேர்ந்து முருகு சுப் பிரமணியன் என்ருகிவிட்டது.

'குமரன்' பத்திரிகை

காரைக்குடியில் நடைபெற்றுவந்த 'குமரன்' என்னும் வாரப் பத்திரிகையில் 1944ஆம் ஆண்டு துணை ஆசிரியராகவும் நிர்வாகியாகவும் சேர்ந்தார்.

'குமரன்' பத்திரிகை வ. ரா. போன்ற பல புகழ்பெற்ற எழுத்தாளர்கள் உரு வான இடம். 'குமரன்' இதழின் ஆசிரியர் திரு. சொ. முருகப்பா பெருந்தமிழறிஞர். சீர்திருத்தச்செம்மல். இனிய பேச்சாளர். அப்பெரியாரின் தலைமையில்பணியாற்றிய இரண்டாண்டு காலமே பத்திரிகைத் துறையில் தனக்கு உறுதிமிக்க அடித் தளத்தை வழங்கிற்று என்று திரு முருகு கூறுகிருர்.

'பொன்னி' துவக்கம்

1947ல் பொன்னி இலக்கியப் பத்திரி கையைத் துவக்கினர். இது முதலில் புதுக் கோட்டையிலிருந்தும் பின்னர் சென்னை யிலிருந்தும் 'வெளியிடப்பட்டது.


முதலில் மாதப் பத்திரிகையாக வந்த 'பொன்னி' பின்னர் மாதம் இரு முறை யாக வெளிவந்தது.

'பொன்னி' என்பது காவிரிக்கு மற்ருெரு பெயர். காவிரி தமிழகத்தை என்றும் வளப்படுத்திக் கொண்டிருப்பது போல 'பொன்னி' இதழும் தாம் வாழ்ந்த ஏழாண்டு காலத்தில் தமிழுக்கு வளமிக்க பணியாற்றி நல்ல பல எழுத்தாளர்களை உருவாக்கியது.

'பொன்னி' பொங்கல் மலரொன்றில் எழுதியிருப்போரின் பட்டியலைப் பார்த்தால் அது எத்துணைச் செல்வாக்குடன் திகழ்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

பெரியார் ஈ.வெ.ரா.
கவியரசர் பாரதிதாசன்
அறிஞர் அண்ணாதுரை
இளவழகனார்
மு. வரதராசன்
கா. அப்பாதுரை
இரா. நெடுஞ்செழியன்
என்.வி. நடராசன்
க. அன்பழகன்
அகிலன்
சுகி
டி. கே. சீனிவாசன்
சுப. நாராயணன்
இராதாமணாளன்
விசு திருநாவுக்கரசு
கண்ணதாசன்
இளமைப்பித்தன்
மா. இளஞ்செழியன்
தில்லை வில்லாளன்
நாரண துரைக்கண்ணன்
அரு. பெரியண்ணன்
நாரா. நாச்சியப்பன்
கோவை இளஞ்சேரன்
கண. இராமநாதன்

கலைஞர் மு. கருணாநிதி, மதியழகன் போன்றோரும் பொன்னியில் எழுதியிருக்கிறார்கள்.



தமிழறிஞர் சோ. முருகப்பா, காரைக்குடியில் நடத்திய 'குமரன்' வார இதழில் 1945ல் முத்தமிழ்வித்தகர் முருகுவின் பத்திரிகை பணி துவங்கியது. மேலே இருப்பது தமிழறிஞர் சோ. முருகப்பாவின் திரு உருவம்.

30 ஆண்டுகளுக்கு முன் வந்த 'பொன்னி'யின் தனி இதழ் விலை 8 அணாவாகும். பொங்கல் மலர் 2 ரூபாய் 8 அணா.

'பாரதிதாசன் பரம்பரை' என்னும் தலைப்பின் கீழ் இளம் கவிஞர்கள் பலரை 'பொன்னி' உருவாக்கியது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பன்மொழிப் புலவர் அப்பாத்துரை முதலான பல பெரியவர்களின் இலக்கியத் தொண்டு பெருகுவதற்கும் 'பொன்னி' உறுதுணை புரிந்துள்ளது. பாவேந்தர் பாரதிதாசனுடன் பல மாதங்கள் உடனுறைகின்ற வாய்ப்பைப் பெற்றவர் திரு. முருகு.

மலேசிய வருகை

1953-ல் திரு. முருகு மலேசியா வந்தார். 13-7-1953-ல் தமிழ் நேசனின் துணையாசிரியராக வேலைக்குச் சேர்ந்தார்.

1954 நவம்பரில் 'தமிழ் முரசு' துணையாசிரியராகச் சேர்ந்து சிங்கப்பூர் சென்றார்.

முரசில் பணி புரிந்த நாளில் முருகுவின்

கைவண்ணத்தில் இரண்டு ஆண்டு மலர்கள் வெளி வந்தன. அம்மலர்கள் இரண்டும் என்றும் போற்றிப் பாதுகாக்கத் தக்கவை. அம்மலர்கள் போன்று இதுவரை மலே சியாவில் வந்ததில்லை என்று சொல்லலாம்.

முருகுவின் பொதுப் பணி-சமூகப்பணி சிங்கப் பூரில்தான் துவங்கியது என்று சொல்ல முடியாது. தமிழகத்திலேயே அவர், முதலில் திராவிடர் கழ கத்திலும் பின்னர் தி. மு. க. விலும் முக்கியப் பொறுப்பாளராக இருந் தார். மற்றவர்களும் மதிக்கத்தக்க வகையில் சேவைபுரிந்தார். அதனுல் தான் இவரின் மலேசிய வருகை அங்கு பலரைக் கண்ணீர் மல்கவைத்தது.

சிங்கப்பூர் தமிழர் சீர் திருத்த சங்கத்தில் பல ஆண்டுகள் செயலாளராக இருந்தார். பலப்பல பகுதி களைத் துவக்கி செயற்பட வைத்தார். ‘இலக்கியப் பகுதி'க்குத் தாமே ஆசிரி யராக இருந்து பாடம் சொல்லிக் கொடுத்தார். இந்த இலக்கியப்பகுதி யில் மாணவனுக இருந்து பாடங் கேட்ட பெருமை எனக்கும் உண்டு



மாட்சிமைதங்கிய 4வது பேரரசர் ஏ. எம். என். விருதை அணிவிக்கிறுர். (1968)

சிங்கப்பூர் தமிழர் திருநாளில் பல விதப் பொறுப்புகள் ஏற்று பணி புரிந் துள்ளார்.

வெண்பாப் போட்டிகள்

தமிழ் முரசில் பணிபுரிந்த காலத்தில் ‘வெண்பாப் போட்டி' துவக்கி ஒரு புத் துணர்ச்சியைக் கவிஞர்களுக்கிடையே தோற்றுவித்தார். அப்போதுதான் மலே சியாவில் நிறையக் கவிஞர்கள் தோன்றி ஞர்கள் என்பதை மறந்துவிட முடியாது. ‘குமர'னில் பணிபுரிந்த காலத்திலும் ‘வெண்பாப் போட்டி' துவக்கி கவிஞர்கள் உருவாக வழி வகுத்ததையும் நாம் இங்கு நினைவு கூரவேண்டும்.

‘கவிதைப் பக்கம்' ஒன்றை முதன் முதலாக தமிழ் முரசில் முருகு துவக்கினுர்

‘எழுத்தாளர் அறிமுகம்' என்னும் பகுதி ஆரம்பித்து புதிய எழுத்தாளர்களை அறிமுகம் செய்து வைத்தார். இதனுல் நிறைய எழுத்தாளர்கள் பயனடைந்தனர்.

அதுவரை முரசில் ‘ரேடியோ நிகழ்ச்சி' தான் வந்துகொண்டிருந்தது. முருகுவின் வருகைக்குப் பின் அது ‘வானெலி நிகழ்ச்சி' யாக மாறியது.

‘தமிழரின் அடிப்படை குறைகள்' என்னும் கட்டுரைத் தொடரைத் தமிழர் முரசு ஞாயிறு பதிப்பில் எழுதி தமிழர்களி டையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி ஞர்.

சிங்கப்பூரில் கவிஞர் ஐ. உலகநாதனுல்

நடத்தப்பட்ட 'மாதவி' இதழ், அது வெளியிட்ட போட்டிக் கட்டுரையில் இவருக்கு 'முத்தமிழ் வித்தகர்' என்னும் பட்டத்தை வழங்கியது.

சிங்கப்பூர் வானொலி பள்ளிக்கூட ஒலிபரப்பில் இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாகப் படைத்தார். மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிவெண்பா, நீதிநெறி விளக்கம், நாலடியார் முதலிய பல நீதி நூல்களுக்கு விளக்கமாக இக்கட்டுரைகள் அமைந்திருந்தன.

இக்கட்டுரைகள் ஒலிபரப்பாகியபின் தமிழ் முரசிலும் பின்னர் கவியரசு கண்ணதாசன் நடத்திய தென்றலிலும் வந்தன.

இவற்றில் 'நீதிவெண்பாவின் நெறி முறைகள்' நூலாக வெளிவந்துள்ளது.

தமிழ்நேசன் ஆசிரியர்

1962 பிப்ரவரியில் தமிழ் நேசன் தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்று கோலாலம்பூர் வந்தார்.

உலகத்திலேயே சுதேசமித்திரனுக்குப் பிறகு இரண்டாவதாகத் தோன்றிய தமிழ்த் தினசரி தமிழ்நேசன்.

நேசனை முழுக்க முழுக்கச் சமுதாயத்தின் குரலாக மாற்றிய பெருமை முருகுவையே சாரும். பத்திரிகைக்காரர்களும் பொதுமக்களும் வெகு தூரத்திலிருப்பவர்கள் என்ற எண்ணத்தை மாற்றி பத்திரிகைக்காரர்களும் பொதுமக்களும் நெருங்கிப் பழகும் நிலையை உருவாக்கினார். இதனால் பத்திரிகை ஆசிரியராக மட்டும் அல்லாமல் சமூகத் தலைவராகவும் இன்று மதிக்கப்படுகிறார்.

விருதுகள்

இவருடைய பத்திரிகைத் துறைச் சேவைக்கு அரசாங்க அங்கீகாரமாக 1968-ம் ஆண்டில் பேரரசரிடமிருந்து ஏ. எம். என். விருது கிடைத்தது.

அந்தச் சேவை இன்னும் விரிவடைந்திருக்கிறது என்பதை இவ்வாண்டு எஸ். எம். எஸ். என்னும் விருதை சிலாங்கூர் சுல்தான் வழங்கியிருப்பதிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

நிதிகள்

முருகு ஆசிரியராக வந்த பிறகு தமிழ் நேசன் சேகரித்துக் கொடுத்திருக்கும் நிதிகளைப் பட்டியலிட்டால் மூக்கின்மேல் விரலை வைத்துப் பிரமிப்பு அடைவோம்.

சிங்கப்பூர் ஜெகதாம்பாள் நிதி முதல்



முன்னாள் அமைச்சர் துன் சம்பந்தன் முதலான டி.இ.கா. பிரமுகர்களுடன் ஆசிரியர் முருகு தேசத்தந்தை துங்குவுக்கு 1963ல் பிறந்தநாள் வாழ்த்துக் கூறியபோது.

செல்வி கிருஷ்ணவேணி நிதிவரை எத்தனை எத்தனை நிதிகள். 1962—1963ல் ஜனநாயகக் காப்பு நிதி 4 லட்சம் சேகரித்து அரசாங்கத்திடம் கொடுத்துள்ளது.


எழுத்தாளர் சங்கம்

மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்குச் சுமார் பத்து ஆண்டுகள் தலைவராக இருந்து திரு. முருகு அதைச் சுறுசுறுப்புடன் இயக்கியதை மறந்துவிட முடியாது. இவர் தலைமையில் எழுத்தாளர் சங்கம் நடத்திய திறனாய்வுக் கூட்டங்கள், கருத்தரங்கம், கவியரங்கம் முதலியவை என்றும் மனத்தில் பசுமையாகவே இருக்கக்கூடியவை.

சொற்பொழிவுகள்

திரு. முருகு நிறைய சீர்திருத்த திருமணங்களை நடத்திவைத்திருக்கிறார்.

தமிழர் திருநாள், பொங்கல், மாநாடுகள், ஆண்டுக்கூட்டங்கள், கருத்தரங்கம், கவியரங்கம், தலைவர்களின் பிறந்தநாள் கூட்டங்கள் மற்றும் சிறப்புக்கூட்டங்கள் என்று மலேசியாவின் எல்லா நகரங்களிலும் தோட்டங்களிலும் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.



திரு. செல்வம் பி.ஏ. ஆனர்ஸ் பட்டம் (1971) பெற்றபோது தன் பெற்றோருடன் எடுத்துக்கொண்ட படம்.

இதுவரை இருபதுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதியுள்ளார். இவற்றில் பல இன்னும் நூலுருவம் பெறாத நிலையில் உள்ளன.

சென்றுவந்த நாடுகள்

சீனா, ரஷியா, பிரிட்டன், தைவான், சுவிட்சர்லாந்து, இத்தாலி, ஜப்பான், கம்போடியா, வியட்னாம், இந்தோனேஷியா, அல்ஜீரியா, எகிப்து முதலான நாடுகளுக்குச் சென்றுவந்துள்ளார். இந்நாடுகள் பற்றிய பயணக் கட்டுரைகளைத் தமிழ்நேசனில் எழுதியுள்ளார்.

ஜப்பானுக்குப் பேரரசர் தம்பதிகளுடனும் சீனாவுக்குப் பிரதமர் துன் ரசாக்குடனும் சென்றுவந்தார்.

தமிழாராய்ச்சி மாநாடுகள்

1966-ல் கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு அமைப்புக்குழு உறுப்பினராக இருந்து அரிய பணிகள் செய்தார். இந்த மாநாட்டிலும் 1968-ல் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டிலும் பேராளராகக் கலந்துகொண்டு கட்டுரைகள் சமர்ப்பித்தார்.

சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடுபற்றி எழுதிய கட்டுரைகள் 'தமிழ்கூறு நல்லுலகம்' என்னும் நூலாக வந்துள்ளது.

பாரதிதாசனின் அன்பு

பாரதிதாசனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிட்டியதாலோ என்னவோ ஆசிரியருக்குக் கவித்துறை மிகவும் பிடித்தமானதாக இருந்தது. ஆரம்பகாலத்தில் கவிதைகள் எழுதியதும் உண்டு.

பாவேந்தர் பாரதிதாசன் எத்துணையளவு திரு. முருகுவிடம் அன்புகொண்டிருந்தார் என்பதைவிளக்க கீழ்க்காணும் ஒரு சம்பவமே போதுமானதாகும்.

காரைக்குடிக்குப் பக்கத்தில் உள்ள சிறுவயலில் ஆசிரியர் முருகுவின் திருமணம் நடந்தது. அந்த ஊருக்கு அப்போது பஸ் வசதி கிடையாது. இத்திருமணத்திற்குக் குன்றக்குடிக்குப் பஸ்ஸில் வந்து சிறுவயலுக்கு ஏறத்தாழ இரண்டு மைல் தூரம் நடந்து வந்து சேர்ந்தார் பாவேந்தர் பாரதிதாசன். இத்திருமணம் வைதிக முறையில் நடந்தும் தீவிர சுயமரியாதைக்காரரான புரட்சிக் கவிஞர் இத்திருமணத்தில் கலந்துகொண்டு அன்று நடந்த வாழ்த்துக் கூட்டத்திலும் உரையாற்றினர். இத்திருமணத்திற்கென்று வாழ்த்துப்பா ஒன்றையும் இயற்றியிருந்தார். தாம் கையெழுத்திட்ட தமது நூலையும் திருமண அன்பளிப்பாக வழங்கினர்.

நற்குணங்கள்

ஆசிரியர் முருகு புகை பிடிப்பதில்லை, மது அருந்துவதில்லை. வெற்றிலை பாக்கு போடும்போதுகூட புகையிலையைப் பயன்படுத்துவதில்லை. இவரின் பிள்ளைகளும்கூட புகைபிடிப்பதில்லை, மது அருந்துவதில்லை. நல்ல குடும்பம் உருவாக ஒரு தந்தையே வழிகாட்டியாக இருக்க முடியும்.

ஆசிரியருக்குக் கோபமே வராது. அதை அபூர்வமாகத்தான் காண முடியும். வரும் கோபத்தையெல்லாம் வெற்றிலை பாக்கு போட்டு மென்று விடுகிறாரா என்று நான் நினைப்பதுண்டு. இவருடைய பிள்ளைகளிடமும் இவருடைய அமைதியான குணமும் சாந்தமும் நிறைந்திருப்பதைக் காணலாம். அதுமட்டுமல்ல இவருக்குக் கீழ் பணிபுரிபவர்களையும் அமைதியான குணம் கொண்டவர்களாக மாற்றும் திறம் பெற்றவர்.

ஆசிரியரைப் போலவே துணைவியாரும் நல்ல குணவதியாவார். பொறுமைசாலியாவார். எல்லாரிடமும் அன்புடன் பழகும் மனம் படைத்தவராவார்.

ஆசிரியர், தம் அன்னையார் சிவகாமி ஆச்சியிடம் ஆழ்ந்த அன்புகொண்டவர். 68 வயது நிரம்பிய அம்மூதாட்டி இப்போது ஆசிரியருடன் கோலாலம்பூரில் தான் இருக்கிறார்கள்.

அலுவலகத்திலிருந்தோ இல்லத்திலிருந்தோ ஆசிரியர் புறப்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் யாராவது வந்தால் தன் அவசரத்தைச் சிறிதும் காட்டிக்கொள்ளாமல் வந்தவர்களின் பிரச்னைகளை ஆழ்ந்து கேட்கும் குணம் கொண்டவர்.

பதவிக்கு ஆசைப்படாதவர் ஆசிரியர். என்றாலும் ஒருசில பொறுப்புகளை அவர் வகித்து வருகிறார். இவை அவரை நாடி வந்தவையாகும்.

- திரைப்பட மேல் முறையீட்டுக்குழு உறுப்பினர்.
- தேசிய வீரர் நல்வாழ்வு நிதி வாரிய உறுப்பினர்.
- பெர்னுமா செய்தி நிறுவன ஆட்சிக் குழு உறுப்பினர்.
- மலேசியப் பத்திரிகைக் கழக ஆட்சிக்குழு உறுப்பினர்.
- ஆசியான் தகவல்சாதன மலேசியக் குழு உறுப்பினர்.
- தமிழ் இளைஞர் மணி மன்ற தேசியப் பேரவையின் காப்பாளர்.

'உள்ளுவதெல்லம் உயர்வுள்ளல்' என்னும் வள்ளுவரின் வாக்கிற்கொப்ப தன்னைப்பற்றிச் சிந்திக்காமல் சமூக முன்னேற்றம் பற்றியே சதா சிந்தித்துக் கொண்டிருக்கும் நல்லறிஞர் முருகு.

இவர் பல்லாண்டு பல்லாண்டு இனிது வாழ நாம் வாழ்த்துவோம்.

முருகு திருமொழிகள்

உணர்ச்சியும் ஊக்கமுமில்லாத சமுதாயத்தை ஆண்டவனுல்கூட கைதூக்கிவிட முடியாது.

ஃ ஃ ஃ

காற்றுள்ள ரப்பர் பந்தை நீருக்குள் எப்படி அழுத்தினலும் அது வெளியே வந்துவிடும். திறமையுள்ளவரை எப்படி மறைத்துவிட முயன்றாலும் அவர்கள் வெளியே வந்துவிடுவார்கள்.

ஃ ஃ ஃ

திருத்தமுடியாத எந்த மனிதனையும் காலமெனும் மாமருந்து திருத்திவிடும்.

(இன்ப நிலையம்)

(கவிஞர் கா. பெருமாள்)

''பாரதிக்குப் பின்வந்தான் பாடுந்தமிழ் மகளின்
சாரதியா(ய்) இன்றிலங்கும் தன்மையினான் – சீரதையே
ஒப்பித் தமிழர் உயர்விற்கே தீங்கவிதை
செப்புவான் வாழ்க சிறந்து''

இப்'பா' மணக்க இயற்றிய புலவன்
முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிர மணியன்!
ஆயிரத் துத்தொள் ளாயிரத்து நாற்பத்
தாறும் ஆண்டில் பாவேந்தர் தமக்குப்
பொன்னின் ஆடையும் பொற்கிழி வழங்கிப்
பூரித்த நாளில் மலர்ந்த மலரில்
'மணந்த பா' இது! பாத்தமிழ் மீது
கொண்ட காதலில் நின்று நிலைத்துப்
பொன்விழாக் காணும் 'முருகு'ட னுடைய
என்னருந் தமையனார் கா. கருப்பண்ணன்
அந்நாள் கூறிய செய்தி ஒன்றினை
இந்நாள் விளம்பல் என்கட னாகும்!

'நாமக் கல்லில் எங்கள் இல்லின்
பட்டக சாலையின் மூலையில் 'முத்தமிழ்
நிலையப்' பலகை முறுவல் பூத்தது!
விருந்தினர் அமர இடுமணை யளவு
அமைந்த பலகைக்கு வெண்தகடு வேய்ந்து
அரைநிலா வளைவில் 'இன்ப நிலையம்' என
அழகு தமிழில் எழுதி, அதன்-கீழ்
யாழும், முழவும், ஆடுமயிலும்
இலச்சினை பொறித்து இருந்தது! இதுதான்
'பாவேந்தர் கூத்தின் விளம்பரம்'—என்று என்
தமையனார் சொன்னார்! சாற்றுக என்றேன்!

முத்தமிழ்ப் பித்தன் முருகுசுப்பிர மணியன்,
மு. செல்லப்பன், யானும் சிலரும்;
பாரதிதாசனார் பாடல்நா டகங்களை
ஊரெலாம் பரப்ப உள்ளம் கொண்டோம்!
கூத்துக் கலைஞர்கள் கூடினர்; கதைக்குத்
தலைமகள் ஒருவரைத் தேடும் பணியில்
இறங்கிய போழ்து எழுந்தது இடைஞ்சல்!
ஒப்பில் அழகியர் பலரைக் கொணர்ந்து
தப்பில் கூத்திற்குத் தகும் தகும் என்போம்!

'தலைமக ளாகத் தகும் எனக் கவிஞர்
சாற்றுவார்' என்று தேற்றிக் கொளுமுன்;
உச்சி தொட்டு உள்ளங்கால்வரை
கச்சித மாகக் கவிக்கண் கொண்டு
நோட்டம் போடுவார் பாட்டின் வேந்தர்!
அழகெலாம் சரிசரி, ஆயினும் 'குட்டை'
என்றன் கவிதைத் தலைவிக்கு ஏற்ற
தோற்றம் குறைவு, விடும் விடும்' என்பார்!
இப்படியாக இழுபறிக் கூத்து
நடந்ததே யன்றி, நாங்கள் நினைத்தது
கூத்தரங் கேற்றம் குதிரைக் கொம்பே!'
'இந்தக் கூத்தின் வரவு செலவு
எப்படி நடந்தது?' என்று நான் கேட்க;

'பாவேந்தர் தம் பாடல்கள் வரவு!
இன்பநிலையத்து இழப்பென்ன பெரிதோ!'
என்றிறு மாந்தார் என்றன் தமையனார்!
ஒப்பனைக் கலவைக் குப்பிகள் பலவும்
ஒட்டு மீசைகள், வாலியின் வாலும்,
கவிஞர் எழுதிய கடிதக் குவியலும்
சான்றுகள் யாமெனக் கட்டியம் பாடின!'
செந்தமிழ் மணக்கும் இன்ப நிலையத்தின்
சொந்தக் காரன் முருகுசுப்பிர மணியன்
எந்தமிழ் நேசன் மணக்கப் பொன்விழா
எடுக்கும் இந்நாள் எந்நாளு மினிக்க
இச்சிறு செய்தி எனது காணிக்கை'.

பொன்விழாக்காணும் செம்மல்

வித்வான் விசு. திருநாவுக்கரசு
தமிழ்நாடு அரசு கல்வித்துறை - புதுக்கோட்டை

1940-ஆம் ஆண்டு நான் சென்னை பல்கலைக் கழகத்திலே தமிழ்ப் புலமைப் பட்டம் பெற்ற நாள். செட்டி நாடு பெற்ற நகரங்களில் 'கோனாபட்டும் முதன்மை உடையது. தமிழ் வளர்ப்பிலும், சைவச் செழிப்பிலும் ஆழமான வரலாறு பெற்ற நகரம்.

மேலே குறிப்பிட்ட ஆண்டில்தான் மொழியுணர்வில் ஒரு புத்தம் புதிய எழுச்சிப்படை-இளைஞர் படை கல்லூரிக் காளையரின் அணி அந்த நகரத்தில் திரண்டது. பணி, பணி எனத் துடித்தெழுந்த - ஓய்வையுணராத திருக்கூட்டம் ஒன்று கூடியது. அதற்கு நான் ஒரு காரணமானாலும், நான் வகுத்துச் சொல்லியதை செயல்படுத்திய தமிழ் மறவர் திரு. முருகு சுப்பிரமணியன் அவர்களே.

பகுத்தறிவுக் கொள்கைபலவற்றிலும் பழைய இலக்கியங்களோடு புதிதாய்ப் பிறந்த தமிழ்க் கவிதை சிலவற்றிலும்—நவீனங்களிலும் ஈடுபாடு கொண்ட அந் நாட்களில் என்னை மிகமிக நெருங்கி நின்றவர் அவரே. மேற்கண்டவற்றில் என்னைப் பற்றிக்கொண்ட .மோகம்—அவரையும் தொற்றிக் கொண்டது. அதன் பயன் ஒரு ஐந்து ஆண்டுக் காலம் ஆவேசமான ஒருவிதத் தமிழ் உணர்வு பெருகி அதன் காரணமாய் தற்காலத் தமிழகத்தின் பல பகுதிகளில் காலச் சுவடுகள் காணப்பட்டு வருகின்றன.

நண்பர் முருகு தம் இளம் பருவத்தில் பழனியாண்டவர் வாசகசாலை நடத்தினார். 'இளந்தமிழன்' கையெழுத்து இதழ் வெளியிட்டுக்கொண்டிருந்தவர். இவைகளிலிருந்து நான் அவரைத் திசைத் திருப்பினேன். ஏன்? எதற்கு? என்று எதுவும் கேளாது அந்தத் திசையில் அச்சமின்றி அடிதளராமல் நடந்து வந்தார். ஆண்டவர் பேராலிருந்த வாசசாலை மறைந்தது. இரண்டே பிரதிகளை எழுதி ஒன்றைத் தன் காரியாலயத்திலும், மற்றொன்றை ஊர்ப் பொது இடத்திலும் வெளியீடுசெய்த 'இளந்தமிழ'னும் நின்று போய்விட்டது. அநேகமாய் இவற்றை எல்லாம் முருகு மறந்திருப்பார் என்று எண்ணுகிறேன். வாசகசாலையும் கை-யெழுத்து மலரும் மறைந்த இடத்திலிருந்து 'இளைஞர் ஒற்றுமைக் கழகம்' என்ற பெயரால் எழுச்சிமிக்க ஒரு கழகம் உருவாகிவிட்டது. நீண்ட நெடுநாளாக நான் கற்பனை செய்துகொண்டிருந்த 'இளங்கோவடிகள்' வண்ணப்படம் பல ஆயிரம் பிரதிகளை வெளியீடு செய்தது. நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தின் புகழ்மிக்க கவியரசர் இளங்கோவுக்குத் தமிழ்நாட்டில் முதன் முதலாக கோனாம்பட்டு நகரத்திலேதான் பல்கலைச் செல்வர் செட்டிநாட்டரசர் டாக்டர் அண்ணாமலைச் செட்டியார் தலைமையில் மங்கலப் பெருவிழா ஒரு பெரும் கலைவிழாவாக 1943ல் எடுக்கப்பட்டது. இதற்கெல்லாம் ஒரு துணைக் காரணமாய் எனக்கு ஒரு வலக் கரமாய் நின்றவர் பொன்விழாக் காணும் செம்மலே.

செட்டி நாட்டின் புகழ்மிக்க வார இதழ் 'குமரன்'. அதன் ஆசிரியர் திரு. சொ. முருகப்பா. இதை எழுதுபவரை துணையாசிரியராகதிரு.முருகப்பாஅழைத்த போது—அதை முருகு .சுப்பிரமணியன் அவர்கட்கு அளித்து-அவரது எழுச்சிமிக்க இனிய தமிழ்நடை—தடைபடாது ஓட வழிவிட்டதும் உண்டு. தனிச் சட்டங்கள் எழுந்து நின்ற போர்க்காலத்தில் புதுக்கோட்டை நகரத்திலிருந்து 'பொன்னி' திங்கள் தோறும் வெளிவர எடுத்த முயற்சிகளையெல்லாம் நான்

சமுதாயக் காவலன் சாயாப் பெற்றியன்!

(முதுதமிழ்ப் பெரும்புலவர் சுவாமி இராமதாசர்)

ஓங்குமா புகழ்சால் உயர்வுடைச் செழும்பதி
தீங்கிலாக் கோலலம் பூரதிற் சிறப்பொடு
செந்தமிழ்ச் செய்திகள் தினந்தினங் கொணர்ந்து
நந்தமிழ்க் குழாந்தனை நலமுறச் செய்யும்
நேசன் றனக்குநல் லாசா னாகிப்
பாச முடன்பணி பலபட வாற்றிடும்
முத்தமிழ் விரகன் முருகுடைச் செம்மல்
சித்தம் உயர்ந்த செழுங்குணத் தோன்றல்
சமுதாயக் காவலன் சாயாப் பெற்றியன்
அமுதார் செஞ்சொல் அமைவுடன் பேணும்
முருகு சுப்பிர மணியன் றனக்கிவண்
உருகு நெஞ்சத் துவகை யாளர்கள்
அன்னார் செயன்முறை யாவையு மாய்ந்து
பொன்னார் நல்விழாப் பொருந்தச் செய்குவான்
தமிழத் தலைவர்கள் தமையெலாங் கூட்டி
தமிழர் செழுநிலை தாழா வண்ணம்
நன்னிலை யோடு நடாத்து மிந்தப்
பொன்விழாச் சிறப்புறப் பெருமகிழ் வோடு
வாழ்த்துவேம் முருகு வளமுட னோங்கிட
வாழ்த்துவேம் முத்தமிழ்க் காவலன் வாழ்கென
வாழ்த்துதும் அகவை வளர்ந்து நலம்பெற
வாழ்த்துதும் இறையருள் மல்க
வாழ்த்துதும் இசையொடு வாழிய நலனே!

எண்ணிப் பார்க்கிறேன்-பிறகு 'பொன்னி' இதழின் பொன்மேனி கண்டு தமிழகம் சொக்கிப் போனதையும் நினைத்துப்பார்க்கிறேன். தேனெனப் பாலெனப் பாகெனத் தித்திக்கும் தமிழ் நடை உருவானதையும்—தமிழ் மரபு காப்பதில் விழிப்புடன் செயல்பட்ட விதத்தையும் நான் எப்படி மறந்துவிடமுடியும்.

இன்று தமிழகத்திலுள்ள செய்தி இதழ்களின் புகழ்மிக்க ஆசிரியர்கள் எவருடன் முருகு சுப்பிரமணியனை ஒப்பிட்டாலும் அந்த மதிப்பீட்டில் அவர் இணையற்று நிற்பது தெரிய வரும். இலக்கிய மதிப்பீட்டிலும், பத்திரிகையின் தரத்திலும் 'பொன்னி' இதழை 'கலைமகள்' இதழுக்கு ஒப்பாகப் பேசி அதற்கு நல்வரவு கூறிய அறிவாற்றல் மிக்க எழுத்தாளர்களை நான் அறிவேன். கவியரசர் பாரதிதாசனையும்—அவரது கவிதைகளையும் தமிழகத்தின் பொதுச்சொத்தாக பிரகடனம் செய்தது போல் எழுதிய முருகுவின் எழுத்துக்களை நன்றியுள்ள தமிழன் எவனும் மறக்கமாட்டான். முருகுவின் அதிசயிக்கத்தக்க பணிகள் பலப்பல. அவற்றையெல்லாம் விரிவாகப் பேச இக்கட்டுரையில் இடமில்லை. எனவே என்னுடைய இலக்கிய யாத்திரையில் (புதினம்) விரிவாக முருகுவோடு அளவளாவுகின்றேன். அணிமைக் காலத்தில் அந்த நூலைத் தமிழகத்திற்குத் தருவேன்.

பொன்விழா அரங்கில்— மங்கல நிகழ்ச்சிகளில் மாலையணிந்து மனையரசியோடு பொன்முறுவல்பூத்த முருகு சுப்பிரமணியனை மானசீகமாகப் பார்த்துக் களிக்கின்றேன். அந்நிலையில் என் பழம் பெரும் நண்பர்க்குப் பல்லாண்டு கூறுகின்றேன்.

வாழ்க! வெல்க!

தொண்டும் வாழ்வும் நிலைத்தோங்குக!

கே. ஆர். ராமசாமி
மலேசிய திராவிடர் கழக தேசியத்தலைவர்

ஐம்பது ஆண்டினை வயதில் நிறைவாக்கி பொன்விழாச் சிறப்பினைப் பெற்றிடும் 'முத்தமிழ் வித்தகர்' முருகு அவர்களை நான் வாழ்த்திடும் வயதினைப் பெறாவிட்டாலும், கழகத்தின் காவலர்களாக விளங்கிவரும் வயதில் முதியவர்களின் சார்பில் கழகத்தின் மனமுவந்த நல்வாழ்த்தினை அன்புடன் கூறிக்கொள்கின்றேன்.

மதிப்பிற்குரிய முருகு அவர்கள் நாளேட்டின் ஆசிரியாராக மட்டுமின்றி, தமிழ்ச் சமுதாயத்தினரிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதில் தனது எழுத்தாற்றலைப் பயன்படுத்தி வந்தவர் என்ற முறையில் கழகத்தவர் அவர்மீது அன்பும் மதிப்பும் கொண்டு வந்துள்ளனர்.

'பொன்னி'யும் முருகுவும்

தமிழகத்திலிருந்து 'பொன்னி' இதழ் வெளிவந்தகாலை நான் பள்ளிப் படிப்பை முடித்த ஆண்டில், தொடர்ந்து சில ஆண்டுகள் பொன்னி இதழ்களின்வழி முருகு அவர்களின் எழுத்தோவியங்களைப் படித்த ஆயிரக்கணக்கானவர்களில்நானும் ஒரு வாசகனாகத் தொடர்புகொண்டிருந்தேன்.

தமிழ்முரசு நாளேட்டின் மூலம் முருகு அவர்களின் தொடர்பு மலேசிய - சிங்கை வாழ் தமிழர்களுக்கு ஏற்படக் காரணமானது. அத்தொடர்பு தமிழ் நேசனுக்கு ஆசிரியராக வந்தபின் விரிவடைந்தது. இக்காலத்தில் முருகு அவர்களது வாழ்க்கையில் பல பொது நிறுவனங்களுடன், பொது மனிதர்களுடன் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்திக்கொண்டார். தமிழவேள் கோ. சாரங்கபாணி அவர்களது பொதுவாழ்க்கைப் பாதையைப் பின்பற்றி மக்களைச் சந்திக்கும் வழியை எளிதாக்கிக்கொண்டார்.

கழகம் நடத்திடும் சீர்திருத்தத் திருமணங்கள், விழாக்கள், பொதுக்குழு மாநாடுகளில் கலந்து சமுதாய நலனுக்கு கழகத்தவர் எங்கெந்த வகையில் பணியாற்றிட வேண்டுமென வலியுறுத்தி வந்துள்ளார்.

சீர்திருத்தத் திருமணம் சட்டத்தின் வழி ஏற்கப்பட வேண்டுமென்பதில் கழகத்தவரோடு, முருகு அவர்களும் உறுதியான கருத்துக் கொண்டிருந்தார். தலைநகரில் மூன்றாண்டுகளுக்கு முன் திருமண மசோதா (முஸ்லிம் அல்லாதார்) சம்பந்தமாக சமுதாயத்தின் கருத்துக்களை ஒன்றுதிரட்ட கோலாலம்பூரில் ஓர் கருத்தரங்கினை மலேசிய திராவிடர் கழகம் கூட்டியது. அக்கருத்தரங்கில் பல்வேறு தரப்பினரும் இம்மசோதா குறித்து பல கருத்துக்களை வழங்கினர். அவைகளை ஒன்றுதிரட்டி ஒரு குழுவின் மூலம் அரசுவிற்கு பரிந்துரை வழங்க முடிவு செய்யப்பட்டது. அக்குழுவில் நான், முருகு, கோலாலம்பூர் மாரியம்மன் ஆலய தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவர் திரு. எஸ். நாராயணசாமி ஆகிய மூவரும் பங்குபெற்றோம்.

திருமண மசோதாவிற்கான பரிந்துரைகளைத் தயாரிக்க வழக்குரைஞர் ஜி. சோசப் அவர்களுடன் சில முறைகள் சந்தித்து பல பிரச்சினைகளை விவாதித்து முழுமைப்படுத்தினோம். சட்டத்துறை அமைச்சர் முன்னிலையிலும், குழுவின் தரப்பிலும் கழகத்தவர்களும், முருகு அவர்களும் கொடுத்த விளக்கங்களே சட்டத்தில் சீர்திருத்தத் திருமணம் செய்துகொள்வதற்கு வகை செய்யப்பட்டது. இந்தச் செயலில் கழகம் மேற்கொண்ட முயற்சிக்கு முருகு அவர்கள் பெரிதும் துணையாக விளங்கியது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ் இளைஞர் மணிமன்றத்திற்கும் —மலேசிய திராவிடர் கழகத்தவர்களுக்கும் சில பிரச்சினைகளின் வழி மேடைப் பேச்சுக்களில் ஏற்பட்ட சில பிணக்குகளை சீர்செய்ய முருகு அவர்கள் தம்புசாமி பிள்ளை தமிழ்ப் பள்ளியில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து இரு தரப்பினரின் கருத்

தமிழ்நாட்டின் தனிப்பெருங் கவியரசர்
பாரதிதாசன் அவர்கள்



முருகு சுப்பிரமணியன் - வள்ளியம்மை

திருமணத் திருநாளில் வழங்கிய

வாழ்த்துப்பா

திருவளர் செல்வன் முருகென அழைக்கும்
மருவுசீர்ச் சுப்பிர மணியன், "குமரனும்"
கவின்தாள் உதவிக் கணக்காயன், பேர்
நவிலினும் உள்ளம் நனிஉவப் புறுமோர்
புகழும், நல் ஒழுக்கமும், புதியன போற்றும்
தகைமையும், எழுத்திலோர் தனித்த வன்மையும்
அமைந்தோன், தன்பேரன்பினை இந்நாள்
அமிழ்துமொழி வள்ளிக் களிக்க லுற்றான்!
புள்ளிமான் நிகர்த்த வள்ளிதானும்
கொள்ளும் உள்ளன்பை அள்ளி முருகினில்
சேர்க்க லானாள்இத் திருமணச் செய்தியைக்
கேட்கலானேம் கிளர்ந்தது மகிழ்ச்சி!
தெள்ளியதமிழ், இசை சேர்ந்தென மணங்கொள்
வள்ளியும் முருகும் பிள்ளைகள் பெற்றும்
பெருவாழ்வுற்றுப் பேரின் பெய்துக!
திருவோங்கு தமிழர் வாழிய
உருவோங்கு செந்தமிழ் உயர்ந்து வாழியே!

தறிந்து நியாயத்தினை முன் நிறுத்தி கருத்து மோதல்களைத் தவிர்க்க அவர் மேற்கொண்ட முயற்சியின்வழி சமுதாயத்திற்கு பொறுப்பான ஒருவராக விளங்கினார்.

கழகத்தின் முக்கியப் பொறுப்பாளர்களோடு அறிஞர் அண்ணா, நாவலர் வருகையின்போது வரவேற்பு ஏற்பாட்டின் காரணமாக முருகு அவர்களுக்கு கழகத்தினர் மீது சிலகாலம் வருத்தம் ஏற்பட்டிருந்தாலும், கழகத்தவரின் தன்னலமற்ற பணியையும், கழகத்தின் கட்டுப்பாட்டையும் எண்ணி அதனைப் பெரிது படுத்தாது நட்புடனேயே பழகி வந்தார். சென்ற ஆண்டு தமிழ்க் கல்விப் பரிந்துரை குறித்த பிரச்சினையில் கழகத்தவர்மீது அவர் வருத்தம் தெரிவித்து எழுதிய கருத்துக்கள் கழகத்தவர்க்கு நாடு முழுவதும் சங்கடத்தை ஏற்படுத்தியது. என்றாலும்கழகத்தின் முக்கியத் தலைவர்கள் பலர் மதிப்பிற்குரிய முருகு அவர்களைச் சந்தித்து கழகம் மேற்கொண்ட முயற்சிகளையும், தீர்மானங்களையும் விளக்கிக் கூறினர்.

நாளேட்டில் வரும் விமர்சனங்களில் தனிப்பட்ட முறையில் தாக்கும் சொற்களை நீக்கிவிட வேண்டுமென கழகத்தவர் கேட்டுக் கொண்டதை ஏற்று அவ்வாதங்களில் கடுமையான தாக்குதல்களை வெளியிடாது குறைத்துக்கொண்டார்.

முருகு என்ற சொல் மூலம் மலேசியத் தமிழர்களில் இலட்சக் கணக்கானோர்களுக்கு அறிமுகமான 'முத்தமிழ்வித்தகர்' முருகு சுப்பிரமணியன் அவர்களது தொண்டும்—வாழ்வும் நிலைத்தோங்குகவென நாட்டின் நல்லோருடன் கழகமும் சேர்ந்து பெருமிதம் கொள்வோமாக.

தமிழும் முருகும்

(கரு. திருவரசு, பினங்கு)

இறைவனை எண்ணிப் பாடா திருந்தவன்
முருகனை மட்டும் எப்படிப் பாடினேன்!
இசையினில் நாட்டம் என்னுள் எழுந்ததால்
இசைத்தமிழ்த் தெய்வம் முருகனுய் மலர்ந்தது!

முருகனைப் பாட எது துணை வந்ததோ!
முருகனை எழுத எதுசொல் தந்ததோ!
முருகனை நினைக்க எதுவழி யானதோ
முருகனை இசைக்க எதுமொழி யானதோ

அதுதமிழ் என்றன் அன்னையாம் செந்தமிழ்
முதுதமிழ் என்றும் முருகாம் எந்தமிழ்!
அதனுடன் பழகிய பயனுல் வந்ததே
முதுமையில் கூட முருகாய் நின்றதோ!

தமிழெனச் சொன்னுல் இனிப்பது முருகு!
தமிழெனும் அழகாய்ச் சிரிப்பது முருகு!
தமிழை மணந்து கலந்து மகிழ்ந்து
தமிழாய் வாழும் வாழ்வே நிறைவு!

தமிழுக் காகவே முருகன் பாட்டு!
தமிழில் வித்தகர் முருகொரு பாட்டு!
தமிழும் முருகும் இசையினில் கூட்டு!
தமிழே 'முருகு'வை இசைபெற வாழ்த்து!

முருகு பொன்விழாக்குழுவினர்

தலைவர்:
திரு. ஆழி. அருள்தாசன்

செயலாளர்:
திரு. சா. ஆ. அன்பானந்தன்


பொருளாளர்:
திரு. எஸ். சொக்கலிங்கம்

புரவலர்கள்:
மாண்புமிகு S. சாமிவேலு M.P.
திரு. அ. சிதம்பரம்
திரு. வி. கே. பதி

செயற்குழுவினர்:
திரு. S.T. ராஜா P.P.T.
திரு. பரிதாமணாளன்
திரு. சோ. பரஞ்சோதி
திரு. D. P. விஜேந்திரன்
திரு. V. பூபாலன்
திரு. பெ. அ. தமிழ்மணி

முருகு என் ஆசான்

க. கிருஷ்ணசாமி
தமிழ் இளைஞர் மணிமன்ற தேசியப் பேரவைத் தலைவர்



மலேசியத் தமிழர்களிடையே இரண்டறக் கலந்து வாழும் முருகு அவர்களுக்கு ஐம்பதாண்டு நிறைவெய்தும் நாள் இன்பமூட்டும் இனிய நாள். தமிழையே எழுத்தாகவும், பேச்சாகவும், வாழ்வாகவும் கொண்டவர் முருகு அவர்கள்.

மேடையில் முருகு அவர்கள் பேசும்போது கொஞ்சுந் தமிழ் தென்றலாகத் தவழ்ந்தோடும். சிக்கல் இல்லாத கரடு முரடு இல்லாத எளிமையானசீரான அழுத்தமான பேச்சு முருகுவின் பேச்சு. எல்லாருக்கும் புரியும்படியாகப் பேசக்கூடியவர். எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும் இனிமையாக—அதேவேளையில் ஆழமாகப் பேசுபவர். நல்ல தமிழ் உணர்வூட்டும் அவர்தம் பேச்சு எத்துணையோ இளைஞர்களை ஈர்த்துப் பொதுவாழ்வில் ஈடுபாடு காட்டச் செய்துள்ளது.

பேச்சினைப்போலவே முருகுவின் எழுத்து நடையும் ஆற்றொழுக்கானது. எல்லாரும் படித்துப் புரிந்துகொள்ளும் படியான எளிமையான நடை. என்றாலும் கருத்துக்களை தயங்காமல் அழுத்தமாகச் சொல்லக்கூடியவர். பத்திரிகைத் தலையங்கங்களை மக்கள் படிக்காமல் இருந்த காலம் போய் கவனமாகப் படிக்கவும் சிந்திக்கவும் தூண்டியவர் முருகு அவர்கள். எத்துணையோ சமுதாயப் பிரச்னைகளுக்கும், அரசியல் பிரச்னைகளுக்கும் தீர்வு காணமுடியாமல் திணறுபவர்கள் கூட முருகுவின் தலையங்கத்தைப் படித்தால் சுலபமான தீர்வுகளைக் கண்டுவிட முடியும்.

நாளிதழ்களின் ஆசிரியர்களாக வருகின்றவர்களுக்கு இருக்கவேண்டிய சிறப்புக்கள் கல்வித்தகுதி மாத்திரம் அன்று. சமுதாயத் தொடர்பு முதலிடம் வகிக்கின்றது. சமுதாயத்தைப் பற்றி எண்ணி எழுத இயலாத நாளிதழ் ஆசிரியர்கள் சமுதாயத்தைப் பிரதிநிதித்துக்கருத்துக்கள் சொல்ல முடியாது. திரு. முருகு அவர்கள் இளமை முதலே சமுதாயத் தொடர்புள்ளவர் என்பதால் அவருடைய தலையங்கங்கள் சமுதாயத்தை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. சமுதாயத்தின் மொத்தக் கருத்துக்களை அழுத்தமாக அஞ்சாமையோடு எடுத்துச் சொல்லக் கூடிவர் முருகு. அதன் விளைவு தனிமனிதர்கள் விரும்பாத பல விஷயங்கள் பொதுமக்களின் விருப்பங்களாக இருந்து வெளிப்படும்போது முருகுவின் மீது வருத்தங்கள் கொண்ட தலைவர்கள் பலர். காழ்ப்புகள் கொண்டவர் சிலர்.

எல்லா சமுதாயத் தலைவர்களும் முருகுவோடு பழகும் வாய்ப்புகள் உண்டு. எந்தத் தலைவரோடும் தொடர்புகொண்டு கருத்துக்களை உரிமையோடு எடுத்துச் சொல்லும் தகுதியைப் பெற்றுள்ளார். தலைவர்கள் அவர் கருத்துக்களுக்குக் காது கொடுக்கிறார்களோ இல்லையோ ஆனால் அவர் சொல்லத் தவறுவதில்லை.

மலேசியத் தமிழர்களின் வரலாற்றில் இரண்டு பத்திரிகை ஆசிரியர்களை நாடு ஒருபோதும் மறக்காது. ஒருவர் காலஞ்சென்ற தன்னிகரற்ற தமிழர் தலைவர் தமிழவேள் கோ. சாரங்கபாணி, மற்றொருவர் நமது முருகு சுப்பிரமணியன் அவர்கள். அந்த ஆசிரியர் நிலைக்கு நமது முருகு

இனிய நினைவு

ந. பழநிவேலு

எத்தனை ஆண்டுக ளாயினு மென்ன?
என்மனம் கவர்ந்த இனிதோர் நிகழ்ச்சி
என்றும் நினைவில் நிலைத்து நிற்கும்
முத்தமிழ் வித்தகர் முருகு சுப்பிர
மணியன் என்னும் தமிழ்மா மணியின்
அருங்குண நலன்கள் ஆயிர மாயிரம்
அவைவெளிப் படுவன அவர்தம் செயல்களில்
அவற்றுள் என்னைப் பற்றிய தொன்று
மலேசிய உதயம் மாபெரும் நிகழ்ச்சி
நாடுகள் ஒன்ருய் இணையும் நன்மை
கருத்தை ஈர்க்க வரைந்தேன் பலப்பல
பாடல்கள் அவற்றைப் பண்ணிசை வல்லார்
சீர்காழி யார்தம் தேன்குரல் வழங்கக்
கேட்ட முத்தமிழ் வித்தகர் அதிலோர்
பாட்டை என்னிடம் கேட்டுப் பெற்றுத்
தமது உயரிய தமிழ்நே சனிலே
வெளியிட் டதையே மறத்தல் எளிதோ?
இலக்கியப் படைப்புகள் ஏற்றம் பெறவே
போட்டி நடத்திப் பவுன்பரி சளித்தும்
தமிழ்க்கல்வி காக்க பெருநிதி திரட்டியும்
அரும்பணி யாற்றும் அன்பின் திருவுரு
பொன்விழா காணும் பாவலர் நாவலர்
என்றும் இனிதாய் வாழ்கபல் லாண்டே

கொடுத்த மரியாதைதான் அதற்குக் காரணம்.

எந்தச் சமயத்தும் ஆசிரியருக்கு சமுதாயம்தான் முன்னிற்கின்றது. அரசியல் தலையாங்கங்கள் அவரின்மேல் சந்தனத்தைப் பூசுவதற்குப் பதில், சேற்றை வாரி விசியிருக்கின்றன. அதனுல் என்ன? ஒரு பத்திரிகை ஆசிரியனுடைய துணிவோடு அதனை ஏற்றுக்கொண்டிருக்கிருர். தன்னுடைய ஆற்ருமையால் சேற்றை வாரி விசிய அரசியல்வாதிகள்கூட காலப்போக்கில் உண்மையை உணர்ந்துள்ளனர்.

முருகுவின் அறிமுகமே பெருத அந்தக் காலத்தில் தமிழ் முரசில் எழுதிய கட்டுரைகளை நினைத்துப் பார்க்கின்றேன். நெஞ்சம் இனிக்கின்றது. அந்த வாய்ப்பை என்போன்ற இளைஞர்களே பெற்ருேம். அந்த இனிய தமிழ் நடையிலே நெஞ்சம் தோய்ந்து மகிழ்ந்த காலங்கள் என்னைத் தமிழுணர்வு உடையவனுய் உருவாக்கிய காலங்கள். பாரதி, பாரதிதாசன் பாடல்களிலும், எழுத்திலும் பேச்சிலும் தோய்ந்து மகிழ்வதற்குக் காரணமான முருகு அவர்கள் என் மானசீகக் குரு! உட்கார்ந்து பாடம் கேட்டால்தான் பாடமா? ஓர் ஆசிரியன் முப்பது நாற்பது மாணவர்களுக்கே வாய்மொழியாகப் பாடம் போதிக்கின்ருன். ஆனுல் ஓர் நாளிதழ் ஆசிரியர் எத்தனையோ பேருக்கு ஆசிரியராகும் வாய்ப்பைப் பெறுகிருர். அவ்வகையில் இன்றும் பத்திரிகைத் தமிழை பழகு தமிழாக்கிப் பாடம் போதிக்கும் நல்லாசான் முருகு.

தமிழை வெறியாகக் கொண்டவரல்லர் முருகு. சில பிரச்னைகளில் அவர் கூறிய கருத்துக்களைக் கொண்டு அவர் தமிழ் வெறியர் என்று கூறிய கருத்துக் குருடர்களும் உண்டு. தமிழைக் காதலிக்கிருர். பிற மொழிகளை நேசிக்கிருர்.



தமிழ் நேசன் 40வது ஆண்டு நிறைவையொட்டி சிலாங்கூர் கிளப்பில் நடந்த வரவேற்பின்போது எடுத்த படம். வலக்கோடியில் அமைச்சர் டத்தோ ஹம்சா தம்பதிகள். இடமிருந்து 'நேசன்' தந்தை திரு. நா. முரு. மலையாண்டி செட்டியார், நேசன் இயக்குநர் புலவர் மு. சேதுராமன், நேசன் நிறுவனத்தின் சேர்மன் திரு எம். நாகப்பன், நேசன் ஆசிரியர் முருகு.

இதனை அவருடன் உழைக்கும் துணை ஆசிரியர்களே நன்குணர்வர்.

எல்லாச் சமுதாய இயக்கங்களோடும் அவருக்குத் தொடர்புண்டு. பழமையைப் போற்றுவோரும், புதுமையை விழைவோ ரும் முருகுவுக்கு வேண்டியவர்கள்தான். பழமையிலும் நல்லதுண்டு புதுமையிலும் பொலிவுண்டு. சமயவாதிகளின் மாநாடு களில் உரையாற்றும் அவர், பகுத்தறிவு இயக்கத்தினரின் பாசறைகளிலும் உலா வருவார். இளைஞர் இயக்கக் கூட்டங் களில் இன்னுரை நவில்வார். அரசியல் வாதிகளின் கூட்டங்களில் நாட்டு நிலை மையை எடுத்துச் சொல்வார். இந்தத் தொடர்புதான் அவர் சார்ந்திருக்கின்ற பத்திரிகைக்குப் பெருஞ் செல்வாக்கைத் தேடித் தந்தது. நான்கு சுவர்களுக்குள் இருந்துகொண்டு நாட்டு நடப்பைக் காண முடியுமா? காற்றுப் புகாத குளிர்சாதன அறைக்குள் இருந்துகொண்டு, தோட்டத் துண்டாடலால் நடுவீதிக்கு வந்துவிட்ட தரித்திர நாராயணர்களைப் பற்றி எழுத முடியுமா? பெரிய பட்டப் படிப்பை படிக் காத முருகு இவற்றை எல்லாம் அலசி ஆராய்கிறார், அனுபவங்களை உதிர்க் கிறார். சமுதாயத் தலைமைக்கு பெரும் படிப்பு தேவையில்லை.

இன்றைய சமுதாயத் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர் முருகு. வேறு எந்தச் சங்கத்திலும் அவர் தலைவர் இல்லை. எழுத்தாளர் சங்கத்தில் மட்டுமே அவர் தலைவராக இருந்தார். அதையும் நாம் பறித்துக்கொண்டுவிட்டோம். இப்போது அவர் சமுதாயத் தலைவர்! இது எவராலும் பறித்துக்கொள்ள முடியாத பெரிய பதவி!

இன்று ஐம்பதாண்டு நிறைவு பெறும் திரு. முருகு அவர்கள் தம்முடைய சொந்த வாழ்வை எழுதி வெளியிடுவது நல்லது. அவர்தம் வரலாறு நமது இளைஞர்களுக்கு உணர்ச்சியூட்டும், எழுச்சியூட்டும். அவரது சமுதாயப் போராட்டங்கள் சமுதாயத்தின் வரலாறாகவும் அமையும். முருகுவின் வர லாற்றுக்குக் காலத்தை வென்று நிற்கும் வலிமை இயல்பாகவே உண்டு.

என்போன்ற இளைஞர்க்கு தமிழுணவு ஊட்டும் தமிழ் வள்ளல் முருகுவை என் னுள் இருக்கும் நல்லுணர்வை எல்லாம் ஒன்று திரட்டி தமிழ் நறுஞ்சொல்லால் 'வாழ்க' என்று வாழ்த்துகிறேன்.

நன்றிமலர் குவிக்கின்றோம்!

இளமைத் தொட்டு இந்நாள் வரையும், உடல்நலங் கெட்டும் உளநலம் கெடாமலிருந்து தமிழ் மொழி, இலக்கியம், கல்வி, சமூகம், பத்திரிகைத் துறை, முதலான தொண்டுகளைத் தள்ளாமல் ஆற்றிவரும் 'தமிழ்க் காவலர்' முருகு சுப்பிரமணியன் அவர்களின் பொன்விழா எல்லா வகையிலும் சிறப்பாயமையப் பல்லாற்றானும் உதவிய நல்லாரனைவர்க்கும் குழுவினர் ஒன்றாகி நன்றி மலர் குவிக்கின்றோம்.

சிறப்பாக,

பொன்னாடை வழங்கிய திருமிகு எஸ். பஞ்சாட்சரம் PPN., PJK.

சிறப்புமலர் வழங்கிய இலக்கியப் புரவலர் திரு. எஸ். ராஜா PPT.

பொற்பதக்கம் வழங்கிய விழாப் புரவலர் மாண்புமிகு ச. சாமிவேலு அவர்கள்

வாழ்த்துத் தட்டு வழங்கிய சமயத் தொண்டர் திருமிகு செ. சொக்கலிங்கம்,

தமிழ்க் கல்விநிதி வழங்கிய பொறியியல் ஆலோசகர் திருமிகு கே. குமாரசிவம்,

நினைவுப் பரிசுகள் வழங்கிய விழாப் புரவலர் வள்ளல் திருமிகு அ. சிதம்பரம்,

அழைப்பிதழ், துண்டுப் பிரசுரம், வண்ண புளோக் வழங்கிய
ஃபைன் ஆர்ட் அச்சகப் பொறுப்பாளர் திரு. வி. கே. பதி,

பொன்னாடை அணிவித்த டத்தோ என். எஸ். மணியம் J.P.

சிறப்பு வாழ்த்துரை வழங்கிய தமிழறிஞர் காரைக்குடி கம்பரடிப்பொடி
தமிழ்த்திரு. சா. கணேசன் அவர்கள்,

மண்டபத்துக்கு உதவிய வழக்குரைஞர் திரு. டி. பி. விஜேந்திரன்,

மலரை மணமுடன் உருவாக்கிய திருவாளர்கள்:
பரிதாமணாளன், கு. சா. பெருமாள், ஃபைன் ஆர்ட் சகோதரர்கள்,

வாழ்த்து, கட்டுரை, கவிதைகள் - வழங்கியோர்,

மலருக்கு விளம்பரம் தந்துதவிய நிறுவனங்கள்,

செய்தி அணிசெய்த தமிழ்நேசன், தொலைக்காட்சி—வானொலி நிலையங்கள்,

தமிழிசை வழங்கிய ஸ்ரீ கலைவாணி இசைக் குழு,

நடனமாடிய பத்மினி நடனப் பள்ளி மாணவிகள்,

நாடகம் நடித்த சுங்கைவே/சுபாங் தமிழ் இளைஞர் மணிமன்றம்.

அனைவர்க்கும் வைத்தோம் அன்புறு நன்றி!

வணக்கம்!

உடன் பிறப்பு,

சா. ஆ. அன்பானந்தன்,
செயலாளர், பொன்விழாக் குழு.

பைன் ஆர்ட் அச்சகம், 100, ஜாலான் பிரிக்பீல்ட்ஸ், கோலாலம்பூர்.